
# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயல்திறன் அறிக்கை
# Annual Performance Report
# 2018




විද්‍යා, තාක්ෂණ හා පර්යේෂණ අමාත්‍යාංශය
விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
Ministry of Science, Technology and Research

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2018

## விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

2002 செப்டம்பர் 12 ஆம் திகதியினை உடையதும் 402 என்னும் இலக்கத்தை கொண்டதுமான பொது நிதிச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய தொகுக்கப்பட்டது

# உள்ளடக்கம்


பக்க இலக்கம்

## 1. அறிமுகவுரை 1

1.1 அமைச்சின் குறிக்கோள்களும் மற்றும் பிரதான செயலாற்றுகை சுட்டிகளும் 4

## 2. அமைப்பாண்மைகளின் ஒழுங்கமைப்பு 5

2.1 நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவு 5

2.2 தொழில்நுட்பவியல் மாற்றீட்டு பிரிவு 5

2.3 தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவு 5

2.4 உள்ளக கணக்காய்வுப் பிரிவு 5

2.5 விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத்திற்கான கூட்டிணைப்பு செயலகம் (COSTI) 5

## 3. 2018 ஆம் ஆண்டில் அமைச்சின் செயலாற்றுகை 6

3.1 நிர்வாகம் மற்றும் நிதியியல் பிரிவு 6

3.2 தொழில்நுட்பவியல் மாற்றீடு 7

3.3 தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவு 14

3.4 உள்ளக கணக்காய்வுப் பிரிவு 22

3.5 விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்கத்திற்கான கூட்டிணைப்பு செயலகத்தினால் விருத்தி செய்யப்பட்டுள்ள முயற்சிகள் 23

3.6 இலங்கை கோள் மண்டலம் 23

3.7 இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவகம் (சிலின்டெக்) 25

3.8 2018 ஆம் ஆண்டில் பாதீட்டு பிரேரணைகளின் செயற்படுத்துகை 30

## 4. 2018 ஆம் ஆண்டின் நிதியியல் சாதனைகள் 33

4.1 அமைச்சினதும் அதன் நிறுவனங்களினதும் நிதியியல் சாதனைகளின் சுருக்கம் 33

4.2 அமைச்சின் நடப்பு செலவினம் 33

4.3 நிறுவனங்களின் நடப்பு செலவினம் 34

4.4 அமைச்சின் மூலதன செலவினம் 34

4.5 அமைச்சின் மொத்த மூலதன ஒதுக்கீடு 36

4.6 முற்பண கணக்குகள் 37

# நோக்கம்

2020ஆம் வருடமளவில், இலங்கை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் மேம்பட்ட ஒரு நாடாகுதல்.

# செயற்பணி

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்கு இன்றியமையாத உயர்தரம், உற்பத்தி மற்றும் பொருளாதார செயற்பாடுகளை நிச்சயம் செய்துகொள்வதற்கு விஞ்ஞான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப மாற்றீடுகள் உள்ளடங்கலாக விஞ்ஞான மற்றும் தொழிற்பாட்டினை மேம்படுத்தலுடன் தொடர்புடைய கொள்கைகளை முறைவடிவமாக்கம் செய்தலும் அமுல்படுத்தலும்.

# 1. அறிமுகவுரை

பொருளாதார அபிவிருத்தி மற்றும் மனித விருத்தியில் முக்கிய இடத்தை வகிக்கும் பிரதான வழி நடத்துனர் என்ற நிலையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கமானது மிக நீண்ட காலமாக இருந்து வருகின்றமைக்கு காரணம், தொழில்நுட்பவியல் மற்றும் விஞ்ஞான புரட்சியுமே தொழல்நுட்பவியல் அபிவிருத்தி, சுகாதார முறைமை, கல்வி மற்றும் அகக் கட்டமைப்புக்கள் என்பனவற்றில் அடிமட்டத்திலிருந்தே மேம்பட்டதொரு நிலையினை ஏற்படுத்துவதற்கு, ஆதாரமாக விளங்கும் விடயங்களாகும். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறையில் அரச மற்றும் தனியார் துறையினரால் செய்யப்படும் முதலீடுகளின் வளர்ச்சியானது, பொருளாதாரத்துறையில் வளர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் மற்றும் தொடர்ச்சியாக முகங்கொடுக்கப்பட்டு வரும் சவால்களை விளிப்பதாகவும் அமைதல் வேண்டும். நிலைபெறுதகு அபிவருத்தியின் நிமித்தம் ஐக்கிய நாடுகளினால் 2030 ஆம் ஆண்டுக்குறியதாக தரப்பட்ட நிகழ்ச்சி நிரலில் " அகக் கட்டமைப்புக்களின் புணருத்தாபனம் நிலைபெறுதகு முறையில் கைத்தொழில் மயமாக்கலை மேம்படுத்தல் மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவித்தல் " எனும் தொனிப்பொருள் பற்றி கூறப்பட்டுள்ள ஒன்பதாம் இலக்கினை சாதிக்கும் வகையில் மொத்த அக உற்பத்திக்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினது பங்களிப்பானது அதிகரிக்கப்படல் வேண்டும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் அதன் அரசானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு முதலீடு செய்வதற்கு வழங்கப்படும் முன்னுரிமை மிகவும் குறைவாகும் என்றதொரு தோற்றப்பாடு உள்ளது. அதாவது யுனெஸ்கோவினால் தரப்பட்ட அறிக்கைக்கு அமைய 2.41 ஆக உள்ள பிராந்திய சராசரி வீதத்தினை, மொத்த அக உற்பத்தியில் ஆராய்ச்சி அபிவிருத்திக்கு செய்யப்படும் முதலீடான 0.1 வீதத்துடன் ஒப்பிடும்போது அது நியாயத்திற்கு புறம்பான பங்களிப்பாக கருதப்படும். இலங்கையானது பெரிதளவில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளவும் உயர் தொழில்நுட்ப திறன்மிகு ஏற்றுமதிகளை விஸ்தரித்துக் கொள்வதற்கும் தேவைப்படக்கூடிய புதுப்புது தொழில்நுட்பங்களை அவற்றோடு இணைக்க பெரிதளவில் முற்படவில்லை என்றும் ஒரு கருத்துண்டு. இந்த பாரம்பரிய அணுகுமுறையை மாற்றுமுகமாக விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சானது, புதிது புதிதான தொழில்நுட்பங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப திறன்கள் மிக்க ஏற்றுமதிகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு வேறுபட்ட கருத்திட்டங்களை அமுல்படுத்துகை செய்யத் தொடங்கியுள்ளது. வேறுபட்ட கருத்திட்டங்கள் எனும்போது அதற்குள், சூரியப் பலகங்களின் மூலவகை மாதிரிகளின் உற்பத்தி எனும் கருத்திட்டம், தாபிப்பதற்கு முன்மொழிவு செய்யப்பட்ட இலங்கை உயிர் தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் உயிர் தொழில்நுட்ப புத்தாக்க பூங்கா, தேசிய விஞ்ஞான மன்றம், இயந்திர இலத்திரனியனால் சாத்தியப்படச் செய்யப்படும் பொருளாதார அபிவிருத்தி புதுமுயற்சி, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் ஆதரவு வழங்கப்படும் அடைக்காப்பக வசதிகள், புத்தாக்கம் மற்றும் புதுக் கண்டுபிடிப்புக்களை ஊக்குவிப்பதற்கான புத்தாக்குனர் விரைவுப்படுத்துகை நிதியீட்டு பொறிமுறை நவீன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பல்கூட்டுத் தொகுதியின் தாபிப்பு, நேர்த்திமிக்க நனோ தொழில்நுட்ப ஆய்வுகூட வசதிகளின் விரிவாக்கம், நனோ செயற்கை கோளின் அறிமுகப்படுத்துகை, நில அவதானிப்புத் தரவுகளை பெற்றுக் கொள்வதற்கும் விநியோகிப்பதற்குமான தேசிய மையத்தை தாபித்தல் போன்ற இதரபல உள்ளடங்கும். விஞ்ஞானம், தொழில்நுட்பம், எந்திரவியல் மற்றும் எண்கணிதவியல் கற்கையினை ஊக்குவித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நேர் அமைச்சுக்களுடன் கூட்டிணைந்து தொழில்நுட்பவியல் அறிவுக்கு முக்கியத்துவம் வழங்கக்கூடிய வகையில் பாடத்திட்டங்களை வடிவமைத்தல் போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகளினூடாக சகல மட்டத்தினருக்கும் சென்றடையும் வகையில் விஞ்ஞானம் பற்றிய அறிவானது பிரபல்யப்படுத்தி ஊக்குவிக்கப்படுகின்றது.

மாண்புமிகு சனாதிபதி அவர்களால் அரசியலமைப்பின் 44(2) உறுப்புரையின் கீழ் ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் ஆக்கப்பட்டதும் 2018 டிசம்பர் மாதம் 28 ஆம் திகதியினையும் மற்றும் 2103/34 என்னும் இலக்கத்தை கொண்டதுமான அதி விசேட வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான நிபந்தனைகளுக்கு அமைவுற விஞ்ஞான, தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சருக்கு பின்வரும் செயற்பாடுகளும் விடயங்களும் ஒப்படைக்கப்படுகின்றது.

**விடயங்களும் செயற்பாடுகளும்**

1. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கும் மேலும் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவகங்கள், திணைக்களங்கள் என்பனவற்றின் விடயப் பரப்பெல்லையின் கீழ் வருகின்ற விடயங்களுக்கும் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் என்பனவற்றை உருவாக்குதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. சர்வதேச ரீதியாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறைகளில் நடத்தப்படுகின்ற ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற புதிய கண்டுபிடிப்புகள் வரிசையில் சேர்வதற்கு தேவையான வசதிகளை உள்நாட்டு ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பனவற்றுக்கு வழங்கல்.

3. அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்தியை பெறும் பொருட்டு விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்தல்.

4. விஞ்ஞானம், தொழில்நுட்பம், சமூகம், பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான தீர்வுகளினை சேர்த்துக்கொள்ளல்.

5. ஆராய்ச்சிகளை திட்டமிடுவதற்கும் நடாத்துவதற்கும் தேவையான வசதிகளை ஆராய்ச்சிக்கும் ஆராய்ச்சி நிறுவகங்களுக்கும் ஏற்பாடு பண்ணிக்கொடுத்தல்.

6. வியாபார சமூகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட பங்கீட்டாளர்கள் யாவருக்கும், உயிர் தொழில்நுட்பம் மற்றும் நனோ தொழில்நுட்பம் உட்பட்ட புதிய ஆராய்ச்சிகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய தகவல்களையும் அறிவையும் பெறச்செய்வதற்கான ஏற்பாடு.

7. தரப்படுத்தலையும் நிர்வாகத்தையும் தாபித்தலுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள்.

8. அமைச்சின் விடய பரப்பெல்லையின் கீழ் ஆராய்ச்சி நிறுவகங்களால் நடாத்தப்படுகின்ற ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தொழில்நுட்ப உதவி வழங்குவதற்கான ஏற்பாடு.

9. புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பில் சமூகத்தை செயலாக்கப்படுத்துவதற்கும் அதற்கு வழிகாட்டுவதற்கும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளல்.

10. வினைமுயலுமையுடன் தொடர்புடைய ஆக்கங்களை உருவாக்குவதற்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தை சமூகத்திற்கு அறிமுகப்படுத்தல்.

11. இலங்கையிலுள்ள சகல ஆராய்ச்சி நிறுவனங்களினையும் கூட்டிணைப்பதனூடாக தேசிய அபிவிருத்தி குறிக்கோளினை சாதிப்பதற்கு ஆர்வத்துடன் பங்களிப்பு செய்தல்.

12. சர்வதேச விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூட்டிணைந்து கூட்டிணை நிகழ்ச்சித்திட்டங்களினை செயற்படுத்துகை செய்தல்.

13. வேறுபட்ட நாடுகளுடன் பல்பக்க மற்றும் இருபக்க கூட்டுறவுகளினூடாக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க நிகழ்ச்சித்திட்டங்களினை ஆரம்பிப்பதன் மூலம் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை காண விழைதல்.

14. நிர்மான கைத்தொழிற்துறையினை விருத்தி செய்வதற்கு ஆராய்ச்சியினை மேம்படுத்துதல்.

15. அதிபுலமைச் சொத்து பற்றிய நிர்வாகம் மற்றும் உலக அதிபுலமைச் சொத்து அலுவலகத்தின் செயற்பாடுகள் என்பன தொடர்பிலான விடயங்கள்.

16. நிறுவகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏனைய விடயப் பரப்பெல்லைகள் பற்றிய விடயங்கள்.

17. அமைப்பாண்மையின் கண்காணிப்பு.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை பூரணத்துவம் செய்தல் பொருட்டு கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களாவன விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அகப்பாட்டெல்லைக்குள் அடக்கப்படுகின்றன.


**நிறுவனங்கள்**

1. நவீன தொழில்நுட்ப நிலையத்திற்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம்
2. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம்
3. தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்
4. தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம்
5. தேசிய ஆராய்ச்சி மன்றம்
6. தேசிய விஞ்ஞான மன்றம்
7. தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு
8. ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை
9. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
10. இலங்கை கோள் மண்டலம்
11. இலங்கை கட்டளைகள் நிறுவகம்
12. இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகம் (SLINTEC)
13. இலங்கை தேசிய அதிபுலமைச் சொத்து அலுவலகம் (NIPO)

இந்த அறிக்கையானது, அமைச்சு 2018 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையில் அமைச்சு முன்னெடுத்த நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் மூலதன மற்றும் நடைமுறை செலவினங்களின் வளர்ச்சி பற்றிய விபரங்களை தருகின்றது. இந்த அறிக்கையானது, திறைசேரியின் 2004/02/24 ஆம் திகதியினையுடையதும் 01/2004 எனும் இலக்கத்தினை கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையின் 3.2 பிரிவில் "வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில்" தொடர்பிலுள்ள வழிபாட்டல்களுக்கு அமைவுற தயாரிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் அமைச்சிற்கு வழங்கப்பட்ட மொத்த நடப்பு மற்றும் மூலதன பாதீட்டு ஒதுக்கீடானது முறையே 1888.60 மில்லியன் மற்றும் 4,808.528 மில்லியனாகும். மொத்த ஒதுக்கீட்டிலிருந்து ரூபாய் 1,711.701 மில்லியன் நடப்பு செலவினமாகவும் மற்றும் 3,232.802 மில்லியன் மூலதன செலவினமாகவும் 2018 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டது.

## 1.1 அமைச்சின் குறிக்கோள்களும் மற்றும் பிரதான செயலாற்றுகை சுட்டிகளும்



## 2. அமைப்பாண்மைகளின் ஒழுங்கமைப்பு

அமைச்சானது பின்வரும் ஐந்து பிரிவுகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

1. நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவு
2. தொழில்நுட்பவியல் மாற்றீட்டு பிரிவு (விதாதா நிகழ்ச்சித்திட்டம்)
3. தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவு
4. அக கணக்காய்வு பிரிவு
5. விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத்திற்கான கூட்டிணைப்பு செயலகம்

### 2.1 நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவு

இப்பிரிவின் பொறுப்புகள் எனப்படும் போது அதற்குள் அலுவலக நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், நிதியியல் முகாமைத்துவம் மற்றும் அமைச்சின் கொள்முதல் செயன்முறைகள் என்பன உள்ளடங்கும். அத்தோடு வழங்கப்பட்ட அதிகாரங்களின் நிபந்தனைகளுக்கு அமைவுற அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் இந் நிறுவனங்கள் உள்ளடங்கும்.

### 2.2 தொழில்நுட்பவியல் மாற்றீட்டு பிரிவு

விஞ்ஞானத்தை பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் அடி மட்டத்திலிருந்தே பிரபல்யப்படுத்தும் அதே வேளையில் நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தரளவிலான வினை முயலுனர்களுக்கு நாடெங்கிலுமுள்ள 267 விதாதா வள நிலையங்களினூடாக விஞ்ஞான அறிவு மற்றும் தொழில்நுட்பவியல் அறிவினை மாற்றீடு செய்தல் இதன் பொறுப்பாகும்.

### 2.3 தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவு

இந்த பிரிவின் கீழ் மூன்று அலகுகள் அடங்குகின்றன.

#### 2.3.1 சர்வதேச தொடர்பிணைப்பு அலகு

விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் சர்வதேச கூட்டிணைவிற்கு உறுதுணையாக இருத்தல் இந்த அலகின் பொறுப்பாகும்.

#### 2.3.2 விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி அலகு

நிதியீடு செய்தல், அறிவினை ஆக்குதல், செயற்திறன் நிர்மாணம் மற்றும் தகவல் பரப்புதல் என்பனவற்றினூடாக தொழில்நுட்பவியல் அபிவிருத்தி மற்றும் புத்தாக்கத்தை ஆரம்பித்தல், உறுதுணையாக இருத்தல் என்பன இந்த அலகின் பொறுப்பாகும்.

#### 2.3.3 திட்டமிடுகை அலகு

அமைச்சினதும் அமைச்சின் கீழ் அடங்கும் நிறுவனங்களினதும் அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிடுதல், கண்காணித்தல் மீள் நோக்குதல் மற்றும் அறிக்கை செய்தல் என்பனவற்றிக்கு உறுதுணையாக இருத்தல் இந்த அலகின் பொறுப்பாகும்.

### 2.4 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அமைச்சு எவ்வித சிக்கலுமின்றி தனது செயற்பாடுகளை முன்நோக்கி கொண்டு செல்வதற்கு அக கட்டுப்பாட்டு முறைமைகளை வலுவுள்ளதாக்குவதற்கு பங்களிப்பு செய்தலே இப் பிரிவின் பொறுப்பாகும்.

### 2.5 விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத்திற்கான கூட்டிணைப்பு செயலகம் (COSTI)

இலங்கை தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க திற முறைகளுக்கு ஒருங்கிணைவாக பெறுமான அதிகரிப்பினை மேம்படுத்தல் மற்றும் வர்த்தகமயப்படுத்துகை செய்தல் என்பவை தொடர்பில் பணியாற்றல் இப்பிரிவின் பொறுப்பாகும்.

# 3. 2018 ஆம் ஆண்டில் அமைச்சின் செயலாற்றுகை

## 3.1 நிர்வாகம் மற்றும் நிதியியல் பிரிவு

### 3.1.1 31.12.2018 இல் உள்ளவாறாக தொழில் நிலை பிரிவு

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலைப்பிரிவு | அனுமதிக்கப்பட்ட தொழில்நிலைப்பிரிவு | தொழில் நிலைப்பிரிவில் பற்றாக்குறை / மேலதிகம் (ஏதேனும் இருப்பின்) |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 25 | 21 | வெற்றிடம் 04 |
| மூன்றாம் நிலை மட்டம் | 29 | 03 | வெற்றிடம் 26 |
| இரண்டாம் நிலை மட்டம் | 741 | 648 | வெற்றிடம் 93 |
| முதனிலை மட்டம் | 236 | 233+76* | வெற்றிடம் 03 |
| **மொத்தம்** | **1031** | **981** | **வெற்றிடம் 126** |

* 25/2014 என்னும் இலக்கத்தினை கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவுற ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 80 காவலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதுடன் இவர்கள் யாவரும் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நிலைப்பிரிவிற்குள் உள்ளடக்கப்படவில்லை.

### 3.1.2 பயிற்சி

#### 3.1.2.1 வெளிநாட்டுப் பயிற்சி 2018

| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய பதவியணி அலுவலர்களின் எண்ணிக்கை | அமைச்சினால் செலவீடு செய்யப்பட்ட மொத்த செலவினம் (ரூபாய்) |
|---|---|---|
| 17 | 23 | 10,944,071.00 |

#### 3.1.2.2 அக பயிற்சி – பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கருத்தரங்கு

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | | அமைச்சினால் செலவிடப்பட்ட செலவினம் (ரூபாய்) |
|---|---|---|
| 77 தனிப்பட்ட பயிற்சிகள் | 03 பயிற்சிகள் - சகல பதவியணி உறுப்பினர்களுக்கும் | 610,917.00 |

## 3.2 தொழில்நுட்பவியல் மாற்றீடு பிரிவு (விதாதா நிகழ்ச்சித்திட்டம்)

அமைச்சின் அகப்பாட்டெல்லைக்குள் இருக்கும் ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து தொழில்நுட்பவியலினையும் விஞ்ஞான அறிவினையும் நாட்டின் அடிமட்டத்தை சார்ந்தோருக்கும் சென்றடைதல் வேண்டும் என்ற நோக்கோடு ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் என்ற வகையில் 2000ஆம் ஆண்டு விதாதா நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வினைமுயலுமையை அபிவிருத்தி செய்வதனூடாக இலங்கையில் வறுமையை ஒழித்து நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு இந்த விதாதா நிகழ்ச்சித்திட்டம் பங்களிப்பு செய்கின்றது. இந்த முயற்சியை பூரணப்படுத்துமுகமாக இலங்கையின் சகல நிர்வாக மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் பிரதேச செயலக மட்டத்தில் 267 விதாதா வள நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

இந்த விதாதா வள நிலையங்களாவன, ஒரு வெளிக்கள கூட்டிணைப்பாளர், கணணி இயக்குனர், ஒரு அலுவலக உதவியாளர் ஆகியோரின் உதவியுடன் ஒரு விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலரினால் (விஞ்ஞான பட்டதாரி) முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. இந்த விதாதா வள நிலையங்கள், ஒரு வெதுப்பகம், யோகட் அடைக்காப்பகம், ஒரு மரக்கறி உலரி, தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கருவி, கணணி மற்றும் இணைய வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.2.1 நடவடிக்கைகளின் முன்னேற்றம்

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விதாதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகள்.

1. தொழில் நுட்பவியல் மாற்றீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்
2. விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
3. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சிறு நூலகங்கள் மற்றும் பிரபாஸ்வர வலைப்பதிவு
4. தொழில்நுட்பவியல் சார் நிலையங்கள்
5. விதாதா பசுமை கடைத்தொகுதி (ஹரித்த கடமண்டியம்) நிகழ்ச்சித் திட்டங்கள்
6. சோதனை அறிக்கைகள் மற்றும் தரச்சான்றிதழ்களை வழங்குதல், விதாதா முறைமை சான்றுப்படுத்துதல் / சிறந்த உற்பத்தி செயன்முறைகள் / இலங்கை தரப்படுத்துதல் என்பனவற்றிற்கு நிதியுதவியை வழங்குதல்.
7. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் தொடர்பான விசேட செயற்றிட்டங்கள்
8. விதாதா பதவியணியினருக்கான செயற்திறன் நிர்மாணம்

#### 3.2.1.1 தொழில்நுட்பவியல் மாற்றீடு நிகழ்ச்சித்திட்டங்கள்

நகர மற்றும் கிராமிய சனத்தொகையினருக்கு இடையிலுள்ள தொழில்நுட்பவியல் இடைவெளியினை நிரப்பும் முகமாக புதிய வியாபார முயற்சிகளை ஆரம்பிக்க விரும்பும் வினைமுயலுனர்களினதும் அதுபோல் வினைமுயலுனர்களாகுவதற்கு சாத்தியம் உடையோர்களுக்கும் தேவைப்படக்கூடிய தொழில்நுட்பவியல் தேவைப்பாட்டினை நாடெங்கிலுமுள்ள விதாதா வள நிலையங்களின் ஊடாக பூரணப்படுத்துவதற்கு தொழில்நுட்பவியல் மாற்றீடு நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டன. 2018ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட தொழில்நுட்பவியல் மாற்றீடு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரங்கள் வருமாறு.

| தொடர் இல. | துறை | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிககை |
|---|---|---|---|
| 1. | மின்னணுவியல் / கணணி | 515 | 140,606 |
| 2. | உணவு தொழில்நுட்பம் | 1008 | |
| 3. | விவசாயம் | 461 | |
| 4. | சுற்றாடல் | 157 | |
| 5. | புதிது புதிதான தொழில்நுட்பங்கள் | 1079 | |
| 6. | ஏனையவை | 476 | |
| **மொத்தம்** | | 3696 | |



குருணாகல்லைச் சார்ந்த விதாதா வள நிலையத்தில் சூரிய பலகம் பற்றிய தொழில்நுட்பவியல் மாற்றீடு நிகழ்ச்சித்திட்டம்



ஹொரணையைச் சார்ந்த விதாதா வள நிலையத்தில் பால் சார் உற்பத்திகள் பற்றிய தொழில்நுட்பவியல் மாற்றீடு நிகழ்ச்சித்திட்டம்

### 3.2.1.2 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு அடிப்படை விஞ்ஞான கற்கை பற்றிய அறிவானது சமனான அளவில் வழங்கப்படுவதற்கு போதுமான அளவு சந்தர்ப்பங்களாவன விதாதா வள நிலையங்களினூடாக ஒழுங்கமைப்பு செய்யப்பட்டதுடன் இது தொடர்பிலான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களாவன பிரதானமாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்புடைய விடயங்களில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. 2018ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரங்களை கீழ்காணும் அட்டவணை தருகின்றது.

| தொடர் இல. | துறை | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிககை |
|---|---|---|---|
| 1. | மின்னணுவியல் / கணணி | 261 | 115,708 |
| 2. | உணவு தொழில்நுட்பம் | 432 | |
| 3. | விவசாயம் | 296 | |
| 4. | சுற்றாடல் | 698 | |
| 5. | புதிது புதிதான தொழில்நுட்பங்கள் | 660 | |
| 6. | ஏனையவை | 590 | |
| **மொத்தம்** | | 2937 | |



யக்கல விதாதா வள நிலையத்தில் உயிர் வாயு பிறப்பாக்கம் பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம்



யக்கலாமுல்ல விதாதா வள நிலையத்தின் ஒழுங்கமைப்பின் கீழ் காலியைச் சார்ந்த சொபாகெத, ரூமஸ்ஸலயில் சூழல் மற்றும் உயிர்ப் பல்வகைமை பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம்

### 3.2.1.3 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சிறு நூலகங்கள் மற்றும் பிரபாஸ்வர வலைப்பதிவு




விஞ்ஞான தொழில்நுட்ப சிறு நூலகங்களாவன 24 மாவட்டங்களில் தாபிக்கப்பட்டதுடன் அவற்றில் 15 நூலகங்கன் மின் நூலகங்களாக விரிவாக்கம் செய்யப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் இளம் சமுதாயத்தினருக்கும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் பற்றிய அண்மித்த தகவல்களை வழங்குவதற்கு தேசிய விதாதா வலையமைப்பினூடாக பிரபாஸ்வர வலைப்பதிவு அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தோடு இந்த பிரபாஸ்வர வலைப்பதிவில் விஞ்ஞான அறிவானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தரப்படுவதனால் இம்மூன்று மொழிகளிலும் பரீட்சியமுள்ள எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் இப்பிரபாஸ்வர வலைப்பதிவு உறுதுணையாக அமைவதுடன் இளம் சமுதாயத்தினரிடையே புத்தாக்க கலாச்சாரத்தையும் போஷித்து வளர்க்கின்றது. 2018ஆம் ஆண்டில் 98 ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

### 3.2.1.4 தொழில்நுட்பவியல் நிலையங்கள்

வினைமுயலுனர்களுடன் தொடர்புடைய தொழில்நுட்பவியல் சிக்கல்களை விளிக்கும் முகமாகவும் அத்துடன் அவர்களுடைய வியாபாரத்தை விருத்தி செய்வதற்கு தேவையான உதவிகளை வழங்குவதற்காகவும் தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம், இலங்கை கட்டளைகள் நிறுவகம், ஏற்றுமதி அபிவிருத்தி சபை, தேசிய வடிவமைப்பு நிலையம் மற்றும் இறக்குமதி அபிவிருத்தி சபை ஆகிய நிறுவனங்களுடன் கூட்டிணைந்து செயற்படுவதற்கு விதாதா தொழில்நுட்பவியல் நிலையங்கள் தாபிக்கப்பட்டன. காலி, மாத்தறை, புத்தளம், குருணாகல் மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தொழில்நுட்பவியல் சிகிச்சை நிலையங்கள் இடம்பெற்றதோடு இறக்குமதி அபிவிருத்தி சபை, கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் ஆகிய நிறுவனங்கள் வினைமுயலுனர்களுக்காக 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தன.



குருணாகல் மாவட்டத்தில்
தொழில்நுட்பவியல் நிலையங்கள்

### 3.2.1.5 விதாதா பசுமை கடைத்தொகுதி (ஹரித்த கடமண்டியம்) நிகழ்ச்சித் திட்டங்கள்

தமது உற்பத்தி பொருட்களை தரமுடையதாக்குதல் மூலமாக போட்டிக்குரிய அக சந்தைக்கு நுழைவதற்கு சிறிய நடுத்தர வினைமுயலுமை துறையினருக்கு வாயப்புக்களை வழங்குமுகமாக இந்த கருதுகோள் ஆரம்பிக்கப்பட்டது.





ஹரித்த கடமண்டிய

### 3.2.1.6 சோதனை அறிக்கைகள் மற்றும் தரச்சான்றிதழ்களை வழங்குதல், விதாதா முறைமை சான்றுப்படுத்துதல் / சிறந்த உற்பத்தி செயன்முறைகள் / இலங்கை தரப்படுத்துதல் என்பனவற்றிற்கு நிதியுதவியை வழங்குதல்

கிராமத்திலிருந்து சந்தையை அடையும் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தும் முகமாக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகம் என்பனவற்றுடன் கூட்டிணைந்து சோதனை அறிக்கைகள் மற்றும் தரச்சான்றிதழ்கள் வழங்குதல்.




விதாதா வினைமுயலுனர்களுக்கு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவக கேட்போர்கூடத்தில் சோதனை அறிக்கைகளை வழங்குதல்

### 3.2.1.7 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப விசேட கருத்திட்டங்கள்

தொழில்நுட்பத்தின் பாவனையை மேம்படுத்துமுகமாக பொதுமக்களோடு தொடர்புற்ற வகையில் தொழில்நுட்ப பாவனைத் துறையில் ஏற்படக்கூடிய பிரதான சிக்கல்களை விளிக்கும் முகமாகவும் அமைச்சானது விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வேறுபட்ட துறைகளில் விசேட கருத்திட்டம் என்றவகையில் அமைச்சு நிதியீடு செய்கின்றது.

| தொடர் இல. | மாவட்டம் | விதாதா வள நிலையம் | கருத்திட்டங்களின் தலைப்பு | செலவினம் (ரூ.) | பயன் பெறுவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | மொனறாகலை | மெதகம | பால் சார் உற்பத்திகள் | 500,000.00 | 20 |
| 2 | இரத்தினபுரி | குருவிட்ட | உயிரியல் ரீதியாக அழியத்தக்க பொதியிடல் முறைமை | 500,000.00 | 10 |
| 3 | பொலனறுவை | ஹிங்குரகொட | CCTV நிழற்பதிவுப் பெட்டி உற்பத்தி | 372,150.00 | 15 |
| 4 | பொலனறுவை | லங்காபுர | மூலிகைத் தேயிலை பைகள் உற்பத்தி | 92,500.00 | 20 |
| 5 | பொலனறுவை | தமன்கடுவ | ஈர்க்கிள் மற்றும் தெங்கு நார்பொருள் உற்பத்தி | 46,750.00 | 10 |
| 6 | களுத்துறை | ஹொரணை | பால் சார் உற்பத்திகள் | 460,000.00 | 10 |
| 7 | மாத்தளை | ரத்தொட்ட | அசமோதக அமில உற்பத்தி | 400,000.00 | 7 |
| 8 | இரத்தினபுரி | அயகம | தாவர நாற்றுப் பண்ணை மற்றும் வெட்டுப்பூக்கள் கைத்தொழில் துறைக்கு நவீன தொழில்நுட்பங்களின் அறிமுகம் | 469,359.00 | 11 |
| 9 | பதுளை | மீகஹகிவுல | பத்திக் உற்பத்திகள் | 301,710.00 | 12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | இரத்தினபுரி | கலவான | தாவர நாற்றுப் பண்ணை மற்றும் வெட்டுப்பூக்கள் கைத்தொழில் துறைக்கு நவீன தொழில்நுட்பங்களின் அறிமுகம் | 469,359.00 | 11 |
| 11 | குருணாகல் | வாரியபொல | வெட்டுப்பூக்கள் கைத்தொழில் துறை கருத்திட்டம் | 480,000.00 | 8 |
| 12 | அம்பாந்தோட் டை | அம்பலாந்தோ ட்டை | தூவுகை முறையினைப் பயன்படுத்தி வலை வீடுகளில் காளான் உற்பத்தி | 683,100.00 | 27 |
| 13 | கம்பஹா | கம்பஹா | காலணி உற்பத்தி | 380,000.00 | 5 |
| 14 | அம்பாந்தோட் டை | அங்குனகொல பெலஸ்ஸ | தூய குடிநீர் விநியோகம் பற்றிய கருத்திட்டம் | 320,000.00 | 100 |
| 15 | காலி | யக்கலமுல்ல | தரமான மிளகு உற்பத்தி | 326,900.00 | 10 |
| 16 | காலி | அக்மீமன | வெட்டுப்பூக்கள் என்ற அடிப்படையில் ஓக்கிட்டை பிரபல்யப்படுத்தல். | 303,600.00 | 10 |
| 17 | மொனறாகலை | பிபலை | காளானில் நீரகற்றி உலர வைத்தல் | 447,000.00 | 12 |
| 18 | பதுளை | மீகஹாகியுல | பைகள் உற்பத்தி செய்யப்படுவதற்கு உயர் தொழில்நுட்பவியல் திறன்மிக்க இயந்திரங்களை வழங்குதல். | 816,980.00 | 20 |
| 19 | மன்னார் | முசாலி | யோகட் உற்பத்தி | 412,200.00 | 6 |
| 20 | கண்டி | ஹத்தரலியத்த | பழங்கள் மற்றும் மரக்கறிகளில் நீர்த்தன்மையினை அகற்றுதல் | 346,000.00 | 10 |
| 21 | பொலனறுவை | ஹிங்குரகொட | மாற்றுச்சக்தி பற்றிய கருத்திட்டம் | 86,254.00 | 15 |
| 22 | மாத்தளை | ரத்தொட்ட | அசமோதக அமில உற்பத்தி 2ஆவது கட்டம் | 55,000.00 | 7 |
| 23 | கம்பஹா | பியகம | யோகட் உற்பத்தி | 175,000.00 | 6 |
| 24 | கம்பஹா | அத்தனகல்ல | பால் சார் உற்பத்திகள் | 77,500.00 | 1 |
| 25 | அனுராதபுரம் | நொச்சியாகம ம | ஊதுபத்திக் குச்சிகள் உற்பத்தி | 245,000.00 | 10 |
| 26 | கேகாலை | கேகாலை | பழங்கள் மற்றும் மரக்கறிகளில் நீர்த்தன்மையினை அகற்றுதல | 140,000.00 | 12 |
| 27 | களுத்துறை | தொடங்கொட | நுளம்புகளை விரட்டக்கூடிய ஊதுபத்திக் குச்சிகள் உற்பத்தி | 220,000.00 | 9 |
| 28 | நுவரெலியா | அம்பங்கங்கே காரல | பழங்கள் மற்றும் மரக்கறிகளில் நீர்த்தன்மையினை அகற்றுதல | 223,000.00 | 8 |
| 29 | காலி | இமதுவ | ஊதுபத்திக் குச்சிகள் உற்பத்தி | 88,000.00 | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30 | காலி | வெலிவிட்டிய திவிதுற | தேயிலை தாவர நாற்றுப்பண்ணை | 177,000.00 | 10 |
| 31 | கேகாலை | கேகாலை | நார்பொருள் சார் அலங்கார உற்பத்திப் பொருட்கள் | 120,570.00 | 21 |
| 32 | மாத்தறை | முலட்டியன | தேன் உற்பத்திக் கருத்திட்டம் | 207,000.00 | 50 |
| 33 | மாத்தறை | கம்புருபிடிய | வெட்டுப்பூக்கள் கைத்தொழில் துறை கருத்திட்டம் | 431,000.00 | 10 |
| 34 | அனுராதபுரம் | பலகல | தூய குடிநீர் விநியோகம் பற்றிய கருத்திட்டம் | 500,000.00 | 65 |
| 35 | மாத்தறை | மலிம்பட | தூவுகை முறையினைப் பயன்படுத்தி வலை வீடுகளிவ் காளான் உற்பத்தி | 273,700.00 | 7 |
| 36 | குருணாகல் | அலவ்வ | பால் சார் உற்பத்திகள் | 160,000.00 | 2 |
| 37 | கண்டி | உடுநுவர | பழங்கள் மற்றும் மரக்கறிகளில் நீர்த்தன்மையினை அகற்றுதல | 115,000.00 | 11 |
| 38 | கம்பஹா | மீரிகம | விதாதா உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்களை விஸ்தரித்தல் | 249,000.00 | 10 |
| 39 | மட்டக்களப்பு | மண்முனை மேற்கு | கைத்தொழில் பொருட்களின் உற்பத்தி | 230,400.00 | 21 |
| 40 | பதுளை | எல்ல | காளான் வளர்ப்போரை ஊக்குவித்தல் | 130,950.00 | 11 |
| 41 | பதுளை | வெலிமடை | வெட்டுப்பூக்கள் கைத்தொழில் துறை கருத்திட்டம் | 498,560.00 | 16 |
| 42 | பதுளை | ஊவ பரணகம | வெட்டுப்பூக்கள் கைத்தொழில் துறை கருத்திட்டம் | 498,560.00 | 16 |
| 43 | பதுளை | அப்புத்தளை | வெட்டுப்பூக்கள் கைத்தொழில் துறை கருத்திட்டம் | 464,600.00 | 23 |
| 44 | அனுராதபுரம் | மெதவச்சிய | தூய குடிநீர் விநியோகம் பற்றிய கருத்திட்டம் | 640,464.28 | 21 |
| 45 | காலி | தாவலம | பைகள் உற்பத்தி | 500,000.00 | 10 |
| 46 | இரத்தினபுரி | எஹெலியகொ ட | காளான் பயிர்ச்செய்கைக்கான சாடிகளைத் தயாரித்தல் | 350,000.00 | 20 |
| 47 | களுத்துறை | மதுரவில | ஸ்பிரிலுனா தாவரப் பயிர்ச்செய்கை | 488,144.00 | 10 |
| 48 | மாத்தறை | அகுரெஸ்ஸ | ஓக்கீட் பயிர்ச்செய்கையின் விருத்தி | 402,000.00 | 8 |
| **மொத்தம்** | | | | **15,874,310.28** | **765** |

### 3.2.1.8 விதாதா பதவியணியினருக்கான செயற்திறன் நிர்மாணம்

| தொடர் இலக்கம் | பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு | பதவியணி வகுதி | நிறுவகம் | பங்கு பெறுனரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவக தொழில்நுட்பங்களில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர்கள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் | 71 |
| 2 | சாத்திய சிந்தனைகள் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர்கள் | உற்பத்தித் திறன் செயலகம் | 27 |
| 3 | மின் நூலகம் பற்றிய விழிப்புகுனர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர்கள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம், தேசிய விஞ்ஞான மன்றம் | 25 |
| 4 | சிறந்த உற்பத்தி செயன்முறை கணக்காய்வு பயிற்சி | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர்கள் | இலங்கை கட்டளைகள் நிறுவகம் | 179 |
| 5 | கருத்திட்ட பிரேரணையினை எழுதுதல் பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப மனித வள உதவியாளர்கள் | கைத்தொழில் சேவை பணியகம் | 114 |
| 6 | மூலிகை சவர்க்கார உற்பத்தி பற்றிய பயிற்சி | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர்கள் | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் | 15 |
| 7 | பழக்க நடக்கையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் அலுவலகத்தில் கடமைகளை எவ்வாறு செயலாற்றுதல் என்பது பற்றிய பயிற்சிப் பட்டறை | அலுவலக உதவியாளர் | தொழில் கற்கைகளுக்கான தேசிய நிறுவகம் | 27 |
| 8 | 3 சான்றிதழ்கள் பற்றிய கற்கை நெறி | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் | தொழில் கற்கைகளுக்கான தேசிய நிறுவகம் | 3 |
| 9 | வினைமுயலுமை மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய பயிற்சிப் பட்டறை | வெளிக்கள கூட்டிணைப்பாளர்கள் | கைத்தொழில் சேவை பணியகம் | 195 |
| 10 | விதாதா வள நிலையங்களில் NVQ மட்டம் 2 கணணி கற்டகை நெறியினை அமுல்படுத்துகை செய்தல் பற்றிய வழிப்புனர்ச்சி பயிற்சிப் பட்டறை | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர்கள், கணணி தரவுப்பதிவு இயக்குனர்கள் | தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி நிறுவகம் | 256 |
| 11 | தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சிப் பட்டறை | கணணி தரவுப்பதிவு இயக்குனர்கள் | வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியம் | 59 |

## 3.3 தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவு

### 3.3.1 விஞ்ஞான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

#### 3.3.1.1 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு (தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சட்டகத்தின் அமுல்படுத்துகை – NRDF)

- இனம் காணப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவருத்தி சட்டகத்தின் அமுல்படுத்துகைக்கு ஆதரவு வழங்கும் முகமாக அமைச்சானது பல்கலைக்கழகங்களுடனும் மற்றும் நிறுவகங்களுடனும் கூட்டிணைந்து ஆராய்ச்சி கருத்தரங்கள் 17 இனை ஒழுங்கமைப்பு செய்துள்ளது.

I. இலங்கையின் போசனை சங்கத்தின் வருடாந்த கல்வியில் கூட்டத்தொடரின் போது, இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைந்து ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட, ஆசியாவில் பொருளியல் சுபீட்சத்திற்கான போசனை எனப்படும் கருத்தரங்கிற்கு முதலீடு செய்யப்பட்டது. இந்த முன்னரங்கின் பிரதான குறிகோளானது பொருளியலாளர்களுக்கும் மற்றும் போசனை தொழில்சார்பியலாளர்களுக்கும் தமது அறிவையும் மற்றும் அனுபவத்தையும் பரிமாறிக் கொள்வதற்கு ஒரு பணித்தள மேடையை வழங்குவதன் ஊடாக நாட்டில் போசணை வளங்கலின் பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரித்தலாகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018, சனவரி மாதம் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம் பெற்றது

II. 2018 ஆம் ஆண்டிற்கான சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கினை இலங்கை ஊவா வெல்லச பல்கலைக்கழகமானது இணைந்து ஒழுங்கமைப்பு செய்தது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 ஆம் ஆண்டு பெப்டவரி மாதம் 01 மற்றும் 02 ஆம் திகதிகளில் பதுளையில் இடம் பெற்றதோடு இக் கருத்தரங்கின் தலைப்பு ‘‘புதுக் கண்டுபிடிப்பான பச்சை தொழில்நுட்பத்திற்கான புதிது புதிதான தொழில்நுட்பங்கள்’’ என்பதாகும்.

III. எந்திரவியல் தொழில்டநுட்ப மாணவர் கல்வியக மாநாட்டுப் பீடம் (FETSAC) – 2017. இந்த நிகழ்ச்சித்திட்டமானது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் எந்திரவியல் தொழில்நுட்ப பீடத்துடன் கூட்டிணைந்து ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கானது எந்திரவியலுடன் தொடர்புற்ற வகையில் மாணவர்களினது புதிது கண்டுபிடிக்கும் ஆற்றலை வளர்த்து அவர்களை கைத்தொழிற் துறைக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் சமுதாயத்திற்கு சேவையாற்றலாகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 பெப்ரவரி மாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்றது.

IV. அடிப்படை கற்கைகளுக்கான தேசிய நிறுவகத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மீள் நோக்கானது அடிப்படை கற்கைகளுக்கான தேசிய நிறுவகத்துடன் இணைந்து ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கானது அடிப்படை கற்கைகளுக்கான தேசிய நிறுவகத்தனது விஞ்ஞானவியல் செயற்பாடுகள் தொடர்பில் தொழில்சார்பியலாளர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் ஒரு தெளிவான அறிவினை வழங்கலாகும். இந்த நிகழ்ச்சித்திடமானது 2017 மார்ச் மாதம் 2 ஆம் திகதி கண்டியில் இடம்பெற்றது.

V. களனிப்பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்துடன் கூட்டிணைந்து ‘‘நேர்த்தி மிகு கணிப்பீடு மற்றும் முறைமை எந்திரவியல் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு’’ என்னும் தலைப்பில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இதன் பிரதான நோக்கானது, ஆராய்ச்சி புலமையாளர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கைத்தொழிற் துறை வல்லுனர்கள் ஆகியோர் நேர்த்திமிகு கணிப்பீடு மற்றும் முறைமை எந்திரவியல் ஆகிய பரப்பெல்லைகளில் தம்மால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகள் தொடர்பில் தமது ஆக்கங்களை முன்னளிப்பு செய்வதற்கு ஒரு பணித்தள மேடையை உருவாக்குதல் ஆகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 மார்ச் மாதம் 29 ஆம் திகதி களனியில் இடம்பெற்றது.

VI. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்துடன் கூட்டிணைந்து ‘‘விஞ்ஞானம்’’ சர்வதேச ஆராய்ச்சி மாநாடு – 2018 (VIRC – 2018) ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கானது விஞ்ஞானத்தில் பல்வேறுபட்ட துறைகளை சார்ந்த

அக மற்றும் சர்வதேச ஆராய்ச்சியாளர்களுக்கு தத்தமது ஆராய்ச்சி தேடல்களை பரப்புவதற்கும் அத்துடன் கருத்துக்கள் மற்றும் அனுபவத்தை பகிர்ந்து கொள்வதற்கும் ஒரு திறந்த முன்னரங்கினை வழங்குதல் ஆகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 யூலை மாதம் 04 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது

VII. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனித நேயம் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்துடன் கூட்டிணைந்து வித்யோதய பட்டம் பயிலுனர்களின் ஆராய்ச்சி தினம் 2018 ஆனது (VURD – 2018) ''மாணவரிலிருந்து ஆராய்ச்சியாளர் வரையிலுமுள்ள அதி சிறந்த நிலைக்கான பாதை'' என்னும் தொனிப்பொருளில் இடம் பெற்ற இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் யூன் மாதம் 13 மற்றும் 18 ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

VIII. பல்துறை அணுகு முறைகள் பற்றிய 5 ஆவது சர்வதேச மாநாடு (ICMA) – 2018 எனும் நிகழ்ச்சித்திட்டமானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டதாரி கற்கைகள் பீடத்துடன் கூட்டிணைநந்து ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது

IX. விவசாய பீடத்தின் 10 ஆவது ஆராய்ச்சி கருத்தரங்கானது ''பசுமை எதிர்காலத்திற்கு வித்திடல் எனும் தொனிப்பொருளின் கீழ் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைந்து ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டமானது 2018 செப்டம்பர் மாதம் 05 ஆம் திகதி ரஜரட்ட பல்கலைக்கழகழத்தில் இடம்பெற்றது.

X. சேர் ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைந்து, 2018 ஆம் ஆண்டிற்கான சேர் ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழக சர்வதேச ஆராய்ச்சி மாநாடானது ''கூட்டிணைவின் ஊடாக அதி சிறந்த தொழில்சார்பியலாளர்களை பெற்றுக் கொள்ளல்'' என்னும் தொனிப்பொருளில் இடம் பெற்றதோடு இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 ஆம் ஆண்டு செப்டம்பரர் மாதம் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்றது.

XI. யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆராய்ச்சி மாநாடு (JUICe- 2018) என்னும் நிகழ்ச்சித்திட்டமானது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துடன் கூட்டிணைந்து பாதுகாப்பு மிக்க எதிர்காலம்'' என்னும் தொனிப்பொருளின் கீழ் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

XII. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துடன் கூட்டிணைந்து சுகாதார விஞ்ஞானத்தில் சர்வதேச மாநாடு என்னும் நிகழ்ச்சித்திட்டமானது ''எல்லைகளை கடந்து அதி சிறப்பினை நோக்கி'' என்னும் தொனிப்பொருளின் கீழ் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 – 9 ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெற்றது.

XIII. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்துடன் கூட்டிணைந்து வறல் வலய விவசாயம் பற்றிய சர்வதேச மாநாடு - 2018 ஆனது ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இந்த மாநாட்டில் பங்குபற்றிய பிரதிநிதிகள் வரல் வலய விவசாயம் தொடர்பிலான தமது தேடல்களை பகிர்ந்து கொள்வதற்கு ஒரு பணித்தள மேடையினை வழங்குவதன் மூலம் வறல் வலய விவசாயம் தொடர்பிலும் அதனை சார்ந்த தொழில்நுட்பம் தொடர்பிலும் விசேட அவதானிப்பு இந்த மாநாட்டில் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 ஒக்டோபர் மாதம் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தல் இடம்பெற்றது.

XIV. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வனவியல் மற்றும் சுற்றாடல் விஞ்ஞான திணைக்களத்துடன் கூட்டிணைந்து 23 ஆவது சர்வதேச வனவியல் மற்றும் சுற்றாடல் கருத்தரங்கு 2018 ஆனது ''2018 ஆம் ஆண்டில் வனவியல் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவத்தை விருத்தி செய்தல்'' என்னும் தொனிப்பொருளின் கீழ் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டதோடு இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஒக்டோபர் மாதம் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்றது.

XV. விஞ்ஞான ஆராய்ச்சி மாநாட்டின் பட்டப்பின் படிப்பு நிறுவகம் 2018 (PGIS RESCON – 2018) ஆனது பேராதனை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டப்படிப்பு நிறுவகத்துடன் கூட்டிணைந்து ஒழுங்கமைப்பு செய்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 நவம்பர் மாதம் 09 – 10 ஆம் திகதி வரை இடம்பெற்றது.

XVI. ஆயுள் வேதம், யுனானி, சித்த வைத்தியம் மற்றும் பாரம்பரிய மருத்துவம் பற்றிய 06 வது சர்வதேச மாநாடானது (ICAUST – 2018) கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ நிறுவகத்துடன் கூட்டிணைந்து ஒழுங்கமைப்பு செய்யப்பட்டதோடு இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 ஒட்டோபர் மாதம் 26 - 28 ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கானது சால்பு மிகு ஆராய்ச்சியாளர்கள், கல்வியில் தேர்ந்த நிபுணர்கள், பௌதீகவியலாளர்கள் பாரம்பரிய மற்றும் மருத்துவ ரீதியில் செயல்முறை சார் பயிற்சியினை செய்பவர்கள் மற்றும் ஆயுள் வேதம் மற்றும் மூலிகை உற்பத்திகள் போன்ற இதர பல உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் தமது கருத்துக்களை பரிமாறிக் கொள்ள ஒரு பணிதள மேடையை வழங்குதல் ஆகும்.

XVII. சிலின்டெக் கல்வியகத்துடன் கூட்டிணைந்து மருத்துவ தாவரங்கள், தாவர இன வகைள் மற்றும் ஏனைய இயற்கை உற்பத்திகள் பற்றிய கருத்தரங்கானது ஒழுங்கமைப்பு செய்யப்பட்டதோடு இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 – 14 ஆம் திகதி வரை இடம்பெற்றது.

**3.3.1.2 தேசிய விஞ்ஞான மன்றத்தை தாபித்தல்**

- விஞ்ஞான தொழில்நுட்ப நிலையச் சபையில் உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளல்.
- ஹோமாகம பிட்டிப்பனயில் தாபிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள தேசிய விஞ்ஞான நிலையத்திற்கான பிரதான திட்டத்தை விருத்தி செய்வதற்கு விஞ்ஞான நிலையங்களுக்கான சீன நிபுணத்தவ குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்தது.

**3.3.1.3 இலங்கையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், எந்திரவியல் மற்றும் எண்கணிதவியல் கற்கையை விருத்தி செய்தல்**

I. ''விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி பற்றிய அறிவினை பள்ளிக்கூடங்களுக்கு புகுத்துதல்'' என்னும் விடயம் தொடர்பில் ஒரு தொகுதி பயிற்சி பட்டறைகளாவன (09) விஞ்ஞான ஆசிரியர்கள் நிமித்தம் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்துடன் கூட்டிணைந்து ஒழுங்கமைப்பு செய்யப்பட்டதோடு இந்த பயிற்சிப் பட்டறைகளாவன 2017 நவம்பர் மாதத்திலிருந்து 2018 யூன் மாதம் வரையில் முன்னெடுக்கப்பட்டதுடன் இப் பயிற்சிப் பட்டறைகளின் போது நாடளாவிய ரீதியில் நோக்குமிடத்து 450 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

II. ''மாதிரி பாடசாலை ஆய்வு கூடங்களை தாபிப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்'' என்னும் விடயம் தொடர்பில் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டமானது 2018 பெப்ரவரி மாதத்திலிருந்து 2018 யூன் மாதம் வரையில் பிரதான விஞ்ஞான ஆசிரியர்கள், ஆசிரிய அறிவுறுத்துனர்கள் (விஞ்ஞானம்) மற்றும் வலய உதவிப்பணிப்பாளர்கள் (விஞ்ஞானம்) ஆகியோருக்கு மாகாண மட்டத்தில் இடம்பெற்றது.

III. இலங்கையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், எந்திரவியல் மற்றும் எண்கணிதவியல் கற்கையை விருத்தி செய்வதற்கு ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்கக்கூடிய பயிற்சிப் பட்டறைகளை கல்வி அமைச்சுடனும் மற்றும் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்துடனும் ஒருங்கிணைந்த வகையில் மாகாண மட்டத்தில் அமைச்சு ஒழுங்கமைப்பு செய்ததோடு இப்பயிற்சிப் பட்டறைகளின் செயற்பாடுகளின் போது 1000 ஆசியரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களாவன ஆகஸ்ட் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையில் இடம்பெற்றன.

IV. நாடெங்கிலுமுள்ள பாடசாலை மாணவர்களிடத்து விஞ்ஞான அறிவினை பிரபல்யப்படுத்தும் முகமாக அமைச்சானது, வேறுபட்ட நிகழ்வுகளை உள்ளடக்கிய விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தை கல்வி அமைச்சுடனும் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்துடன் ஒருங்கிணைந்த வகையில் பாடசாலை மாணவர்களுக்காக ஒழுங்கமைப்பு செய்தது.

V. இலங்கையானது, 23 சர்வதேச வானியலாராய்ச்சி ஒலிம்பியாட் இனை 2018 ஆம் ஆண்டில் நடாத்துகின்றது. அமைச்சு, இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கம், பௌதீகவியல் நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம், நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சீ கிளார்க் நிறுவகம், இலங்கை கோள் மண்டலம் மற்றும் இலங்கை ஒலிம்பியாட் சங்கம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குப்படுத்தியது. இது தொடர்பில் ஒரு தொகுதி பயிற்சிப்பட்டறைகளாவன 2018 யூலை மாதத்திலிருந்து 2018 செப்டம்பர் மாதம் வரை இடம்பெற்றது.

**3.3.1.4 விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்துதல்**

- **வித்யா பத்திரிகை**

பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு விஞ்ஞான அறிவை பரப்புவதற்காக ‘‘வித்யா’’ பத்திரிகை எனப்படும் 16 பக்கங்களைக் கொண்ட இதழானது 2018 ஜனவரி மாதத்திலிருந்து 2018 ஜூலை மாதம் வரை மாதத்திற்கு ஒரு முறை என்ற அடிப்படையில் மும்மொழிகளிலும் தினமின, தினகரன் மற்றும் டெய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளில் இணைப்பிதழாக பிரசுரிக்கப்பட்டதோடு ‘‘மின்’’ புதினப் பத்திரிகையாகவும் பிரசுரிக்கப்பட்டது.

விஞ்ஞான கற்கையை ஊக்குவிக்கும் நோக்கோடு விசேடமாக பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு ‘‘வித்யா’’ பத்திரிகை வடிவமைக்கப்பட்டது. இந்த இலக்கு சாதிக்கப்படுவதற்கு உலகளாவிய ரீதியில் பிரபல்யமான விஞ்ஞானிகளது ஆக்கங்களும் அவர்களோடுடனான நேர்காணல்களும் அவர்களது புதிய அணுகுமுறைகளும் அத்துடன் புதுப்புது தேடல்களும் இந்த பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கேள்விக் கொத்துக்கள் அடங்கிய ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டதோடு வெற்றியாளர்களுக்கு மூன்று பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்பட்டன.

- **பயிற்சிப்பட்டறைகள்**

வயம்ப பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைந்து இளம் ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றும் விஞ்ஞான சமூகத்தினருக்கும் விஞ்ஞான தொடர்பாடல் மற்றும் எழுதுதல் பயிற்சிப் பட்டறையானது (WILC-2018) ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இதன் நிமித்தம் இனங்காணப்பட்ட தொனிப்பொருள்களாவன எண்கணிதவியல் மற்றும் புள்ளிவிபரவியல், உயர் பிரயோக விஞ்ஞானம், பொருளியல், எந்திரவியல் மற்றும் இதரபலவாகும் என்பதோடு மூன்றாவது வயம்ப சர்வதேச மாநாடானது நிலையான அபிவிருத்தி எனும் தொனிப்பொருள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டது.

- **கண்காட்சிகள்**

V2025 ஒழுங்கமைப்பதற்கு பங்களித்தல், கிராமியம்சார் வினைமுயலுனர்களை ஊக்குவித்தல் மற்றும் அடிமட்டத்திலான வியாபார கருத்திட்டங்களை விருத்தி செய்வதற்கு வியாபார அறிவு, நிதியுதவி, ஆலோசனைகளை வழங்கல்.

தொழில் சார்பியல் வழிகாட்டல்கள், மாணவரின் ஆர்வத்தை இனங்காணல் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுடன் கூட்டிணைந்து புதிய புத்தாக்குனர்களுக்கு வினைமுயலுனர்களாக்கும் வாய்ப்பினை வழங்கல் போன்றவற்றை முன்னெடுப்பதற்காக 19+ கண்காட்சியினை ஒழுங்கமைப்பதற்கு பங்களித்தல்.

- **விஞ்ஞான பட விழா**

  "கோத்தீ" நிறுவகத்துடன் இணைந்து 2018ஆம் ஆண்டிற்கான விஞ்ஞான பட விழாவை நடாத்துவதற்கான பூர்வாங்க முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே விஞ்ஞான பட விழா பற்றிய அறிவினை பரப்புவதற்கு 30 விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

  இலங்கை வாழ் மக்களுக்கு விஞ்ஞானம் பற்றிய தமது அறிவையும் அனுபவத்தையும் சர்வதேச மட்டத்திலான விஞ்ஞான உலகுடன் பகிர்ந்துக் கொள்வதற்கும் சமுதாயத்தின் வேறுபட்ட மட்டத்து மக்களிடையே விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக இந்நிகழ்வு ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.

### 3.3.1.5 ஆராய்ச்சிக்கு ஆதரவு வழங்கல்

- பத்திரிகைக்கு அறிக்கை செய்வோர், விஞ்ஞான தொடர்பாடலை உடையோர் மற்றும் தமது விஞ்ஞான அறிவினை விருத்தி செய்ய விரும்பும் ஏனையோரை ஊக்குவிப்பு செய்யும் வகையில் சிலின்டெக் கல்வியகத்துடன் கூட்டிணைந்து விஞ்ஞான தொடர்பாடல் மற்றும் விஞ்ஞான ரீதியிலான நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றை முன்னெடுத்தல்.

- சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் சுகாதார விஞ்ஞானத்துடன் இணைந்த துறைகளில் பட்டம் பயிலும் மாணவர்கள் தமது இறுதி வருட ஆராயச்சிகளினை முன்னெடுப்பதற்கு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆய்வுக்கூடங்களை பயன்படுத்த அனுமதித்தல்.

### 3.3.1.6 இருபக்கத்து கூட்டிணைவு

- **இந்தோ - ஸ்ரீ லங்கா இணை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம்**

  அமைச்சிற்கும் இந்திய நாட்டை சேர்ந்த விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் திணைக்களத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டுறவு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவுற இணை ஆராய்ச்சி கருத்திட்டங்கள் 18 உம் இணை பயிற்சிப்பட்டறைகள் 2 உம் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியில் அமுலாக்கம் செய்யப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்டன.

  ஈராண்டுக்கு ஒரு முறை நடைபெறும் இந்தோ ஸ்ரீ லங்கா இணை ஆராய்ச்சிக்கான வருடாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமானது 2018 யூலை மாதம் இடம்பெற்றது.

  "மனித எந்திரவியல் மற்றும் மீன்பிடி மற்றும் நீர் வளத்துறைக்கான தன்னியக்கவாக்க பிரயோகம் என்பனவற்றை விருத்தி செய்தலும் அது பற்றிய அறிவு பரிமாற்றமும்" என்னும் தலைப்பு தொடர்பிலான இந்தோ ஸ்ரீ லங்கா இணைப்பயிற்சி பட்டறையானது 2018 டிசம்பர் மாதம் இந்தியாவில் இடம்பெற்றது.

- **இந்திய விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி இணையுரிமை நிகழ்ச்சித் திட்டம்** (ISRF)

  இந்திய நாட்டின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சானது இலங்கை விஞ்ஞானிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் "இந்திய விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி இணையுரிமை நிகழ்சித்திட்டம்" என்ற நிகழ்ச்சித்திட்டத்தினூடாக இணையுரிமைகள் வழங்குவதற்கு ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை தொடங்கியுள்ளது. இரண்டு விண்ணப்பங்களாவன இணையுரிமை பெறுவதற்காக அனுமதியினை பெறுதல் பொருட்டு இந்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

- **CERN இல் உயர் சக்தி ஆய்வுகளுக்கான பிஎச்டி (PhD) பட்டங்களை பெற்றுக் கொள்வதற்கு வழிகோலும் பட்டப்பின் படிப்பு கற்கைகள்**

இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளுக்கு அமைவுற இலங்கையானது, சுவிற்ஸலாந்திலுள்ள CERN இல் முன்னனி பரிசோதனை தொடர்பில் முழு உறுப்புரிமையை பெற்றுக் கொண்டுள்ளது. இதற்கமைவுற இலங்கையைச் சேர்ந்த இளம் விஞ்ஞானிகளுக்கு உயர் பௌதிகவியல் சக்தியில் ஆராய்ச்சிகளினை முன்னெடுப்பதற்கு வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. இலங்கைசார் இளம் விஞ்ஞானிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் இணையுரிமைகளை வழங்குவதற்கான ஒரு பிஎச்டி திட்டம் தொடர்பில் பூர்வாங்க முயற்சிகளினை தொடங்கியுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிஎச்டி கற்கையினை முன்னெடுப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட நான்கு ஆராய்ச்சியாளர்கள் தற்போது CERN இல் பிஎச்டி பட்டத்திற்கான கல்வியினை பயில்கின்றனர்.

- **கிரய்சோடைல் அஸ்பெஸ்டோஸ் இனை பாதுகாப்பான முறையில் பாவித்தல் எனும் விடயம் தொடர்பான பணிக்குழு**

அமைச்சிற்கும் ரஷ்ய நாட்டினைச் சார்ந்த ஊறல் வர்த்தக சபைக்கும் இடையிலான கூட்டிணைவின் பெறுபேறு என்ற வகையில் ஒரு பணிக்குழுவானது கிரய்சோடைல் அஸ்பெஸ்டோஸினை இலங்கையில் பாதுகாப்பான முறையில் பாவித்தல் எனும் விடயம் தொடர்பிலான தரவுகளை கணிப்பதற்கு தாபிக்கப்பட்டது. இக்குழுவானது, இவ்விடயம் தொடர்பில் நிபுணத்துவம் உடைய இருநாட்டு பிரதிநிதிகளையும் உள்ளடக்கியுள்ளது. பணிக்குழுவின் கோரிக்கைக்கு அமைவுற அமைச்சானது, நான்கு தொனிப்பொருள்கள் தொடர்பில் பிரேரணைகளை விளம்பரப்படுத்தியது. (இலங்கையில் வீட்டில் உள்ள தூசிகள் மற்றும் சுற்றுச்சூழலில் உள்ள தூசிகள் என்பவற்றில் கிரய்சோடைல் அஸ்பெஸ்டோஸ் நாரின் செறிவு வீதமும் அவற்றின் முக்கியத்துவமும், இலங்கையில் அஸ்பெஸ்டோஸ் கைத்தொழிற்துறையில் பணியாற்றும் ஊழியர்களினால் ஏற்படக்கூடிய பரவும் நோய்கள், கிரய்சோடைல் அஸ்பெஸ்டோஸ் பாவனையால் ஏற்படக்கூடிய சிறுநீரக நோய்கள், மெசோதெலியோமா, சுவாச நோய்கள் என்பவற்றுடன் தொடர்புடைய பிரச்சனைகள்). இதனைத் தொடர்ந்து துருக்கியில் ஜுலை மாதம் 23ஆம் திகதி இடம்பெற்ற 3ஆவது கூட்டத்தின் போது இப்பிரேரணைகளாவன மதிப்பீடு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டன. தேசிய ஆராய்ச்சி மன்றமானது, நிதியத்தை பகிரும் என்பதுடன் நான்கு ஆராய்ச்சி கருத்திட்டங்களினதும் வளர்ச்சியினை தேசிய ஆராய்ச்சி மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் மானிய வழிகாட்டல்களுக்கு அமைவுற கண்காணிக்கும்.

Chrysotile Asbestos ஆராய்ச்சி பற்றிய முதலாவது முன்னேற்ற மீளாய்வு கூட்ட மாநாடு 2018 டிசம்பர் மாதம் இடம்பெற்றது.

- **கைச்சாத்திடப்பட்டு பூர்வாங்க முயற்சிகள் தொடங்கப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள்**

(I). இலங்கை அரசிற்கும் தென்னாபிரிக்க குடியரசிற்கும் இடையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையானது 2018 ஜனவரி மாதம் தென்னாப்பிரிக்காவிலுள்ள பிரிடோரியா எனுமிடத்தில் கைச்சாத்திடப்பட்டது.

(II). விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் கூட்டிணைதல் எனும் விடயம் தொடர்பிலான 1 ஆவது இணை குழு கூட்டமானது இலங்கை விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சிற்கும் தாய்லாந்து நாட்டின் விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சிற்கும் இடையில் இடம்பெற்றது.

(III). விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி எனும் துறைகள் தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றிய 1ஆவது இணை குழு கூட்டமானது, இலங்கை விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சிற்கும் கியூபா நாட்டினது விஞ்ஞான

தொழில்நுட்பவியல் சுற்றாடல் அமைச்சிற்கும் இடையில் 2018 ஜனவரி மாதம் கியூபா நாட்டில் இடம்பெற்றது.

- **ஏனைய கூட்டிணைவுகள்**

I. சீன நாட்டின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சினாலும் யுனான் மாகாண மக்கள் அரசினாலும் இணை அனுசரணை செய்யப்பட்டதும் 2018 ஜூன் மாதம் குயூமிய் எனுமிடத்தில் இடம்பெற்றதுமான சீன தென்னாசிய மாற்றீடும் கூட்டிணை நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்றாவது முன்னரங்கில் கௌரவ அமைச்சர் மற்றும் இலங்கையின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

II. ஈக்குவடோர், பிலாரஸ், லெட்வியா, நியூசிலாந்து, சுலோவெனியா, வியட்நாம் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய விடயங்கள் தொடர்பில் உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மேற்கொள்ளுதல்.

- **அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தி நாடுகளில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பிலுள்ள நிலையத்தின் 14ஆவது ஆளுமை சபையின் 1ஆவது கூட்டம். (NAM S&T Centre)**

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தி நாடுகளில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பிலுள்ள நிலையத்தின் 14ஆவது ஆளுமை சபையின் 1 ஆவது கூட்டமானது, 2018 செப்டம்பர் மாதம் கொழும்பில் இடம்பெற்றது. உறுப்புரிமை நாடுகளினைச் (எகிப்து, இந்தியா, மலேசியா, மௌரிட்டிஸ், தென் ஆபிரிக்கா, இலங்கை) சார்ந்த 09 உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

### 3.3.1.7 ஏனைய அபிவிருத்தி முயற்சிகள்

- **சூரிய படலங்களின் மூல வகை மாதிரி உற்பத்திகள் பற்றிய கருத்திட்டம்**

சூரிய படலங்களின் மூல வகை மாதிரி உற்பத்திகள் பற்றிய கருத்திட்டமானது, களனி, யாழ்ப்பாணம், ருகுணு மற்றும் பேராதனை ஆகிய பிரதான பல்கலைக்கழகங்கள் நான்கினால் அமுல்படுத்துகை செய்யப்படுவதுடன் இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கமானது, சூரிய படலங்களினை நிறுவுதல், தொழிற்படச் செய்தல், பேணுதல் மற்றும் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வசதிகளை விருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகள் தொடர்பில் 2000 திறன்மிக்க தொழிலாளர்களை உருவாக்குதலாகும். இதன் மூலம் இலங்கையில் சூரிய சக்தி கைத்தொழிற்துறையில் மனித வளம் விருத்தி ஆகும். கருத்திட்டத்தை முகாமைத்துவம் செய்யும் அலகானது களனி பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன், அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தொழிற்படச் செய்யப்படுகிறது. அறிக்கை செய்யப்படும் காலக்கட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகளில் காணப்படுகின்ற வளர்ச்சியானது கீழ்வருமாறு சுருக்கமாக தரப்பட்டுள்ளது.

- பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 27 மற்றும் சூரிய சக்தியினை பயன்படுத்துதல் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன பூரணப்படுத்தப்பட்டன. இதில் கம்பஹா, கொழும்பு, கண்டி, மாத்தளை, அம்பாந்தோட்டை, காலி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 1786 பேர் கலந்துக் கொண்டனர்.

- சூரிய சக்தி எனும் துறையில் எம்பில்/பிஎச்டி பட்டங்களை பெறுவதற்கான கற்கையை பயில்வதற்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி உதிவியாளர்களை சேர்த்துக் கொள்ளும் நிமித்தம் விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இந்த ஆராய்ச்சி உதவியாளர்களே, தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகத்தின் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களினாலும் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்திட்டம் தொடர்பில் செயற்படும் பிரதி கருத்திட்ட பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பொறுப்பாக இருப்பர்.

- சூரிய சக்தியினை பற்றிய பயிற்சியினை வழங்குவதற்கு NVQ மட்டம் 4 இற்கு சமனான பாடத்திட்ட தொகுதியொன்று விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கான மாணவர் உள்ளீர்ப்பின் முதல் கட்ட நடவடிக்கையானது, நவம்பர் மாதம் தொடங்கவுள்ளது. க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களே இதன் முதல் இலக்காகும். தனியார் துறைசார் கைத்தொழிற்துறையாளர்களின் பங்களிப்புடன் இந்தப் பயிற்சியின் முதல் கட்ட நடவடிக்கை தொடங்கப்படும்.

- பயிற்சியினை வழங்குவதற்கு போதிய வசதிகளையுடைய தனியார் துறைசார் கைத்தொழிற்துறையாளர்களுக்கு இப்பயிற்சி நிகழச்சித் திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பில் தராதர அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதற்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி அதிகாரசபையானது உறுதுணையை வழங்குகிறது.

- **இயந்திர மின்னணுவியலை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்தி புது முயற்சிகள் (MEDI)**

MEDI தொடர்பிலான பூர்வாங்க முயற்சிகள் 2017ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த பூர்வாங்க முயற்சியின் பிரதான நோக்கானது, உற்பத்தி வடிவமைப்பு எந்திரவியல் கம்பனிகளுக்கு அவர்களின் உற்பத்தி பொருட்களை உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளில் சர்வதேச தரங்களுக்கு சமனான தரத்தில் சந்தைப்படுத்துவதற்கு வசதி செய்து கொடுத்தலாகும். இந்த பூர்வாங்க முயற்சியின் முதல் கட்டமானது எந்திர மின்னணுவியலை அடிப்படையாக கொண்டதாக அமையும் என்பதுடன் அதன்பின்பு எதிர்காலத்தில் வேறு பரப்பெல்லைகளில் விஸ்தரிப்பு செய்யப்படும். இந்த பூர்வாங்க முயற்சியானது, நீண்ட தவணைக் கால கடன் வசதிகள் மற்றும் கட்டளைகளில் பயிற்சி, மூலவகை மாதிரி மற்றும் சோதனை வசதிகள் எனப்படும் இரு பிரதான ஆக்கக் கூறுகளை கொண்டதாகும். நீண்ட தவணைக் கால கடன் வசதி எனப்படும் ஆக்கக் கூறானது, நிதி அமைச்சுடன் கூட்டிணைந்து இலங்கை வியாபார முயற்சிகள் என்பதன் கீழ் அமுல்படுத்துகை செய்யப்படும் என்பதுடன் இதற்கு அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச தரங்களுக்கு ஒப்பான தரங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு கட்டளைகளில் பயிற்சி மூலவகை மாதிரி மற்றும் சோதனை வசதிகள் எனப்படும் ஆக்கக்கூறானது தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் அமுல்படுத்துகை செய்யப்படும்.

நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சியானது கீழே தொகுத்து தரப்பட்டுள்ளது.

- கட்டளைகள் மூலவகைமாதிரி பயிற்சி வசதிகளுக்கான விரிவான முன்மொழிவானது தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டதுடன் கட்டளைகள் மூலவகைமாதிரி பயிற்சி வசதிகளுக்கான ஒதுக்கீட்டை பயன்படுத்துவதற்கு அமைச்சரவை ஆவணம் தயாரிக்கப்பட்டது.

- கட்டளைகளில் பயிற்சி மூலவகை மாதிரி மற்றும் சோதனைகளில் பயிற்சி எனும் ஆக்கக்கூறினை தாபிப்பதற்கு தேவையான பிரதான மற்றும் அடிப்படை கருவிகளினது குறித்துரைப்புக்களை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது ஏற்கனவே பூரணப்படுத்தியுள்ளது.

- இதன் பொருட்டு தேவைப்படும் அலுவலக இடவசதியானது, ஹோமாகம பிட்டிபன எனுமிடத்தில் அமைந்துள்ள நனோ தொழில்நுட்பவியல் விஞ்ஞான பூங்காவில் பெற்றுக் கொள்வதற்கு தேவையான முயற்சிகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

- நிதி அமைச்சு, வியாபார முயற்சிகள் மற்றும் ஐந்து வங்கிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் வெற்றி பெற்றன.

- **உயிர்த் தொழில்நுட்பவியல் புத்தாக்க பூங்கா**

2016ஆம் ஆண்டினது பாதீட்டுடன் ஒருங்கிணைந்த வகையில் அமைச்சானது, நாட்டில் உயிர்த் தொழில்நுட்பவியலை அடிப்படையாக கொண்ட ஏற்றுமதிகளினை அதிகரிப்பதிலும் உயிர்த்தொழில்நுட்பவியல் எனும் துறையில் மனித வளத்தை மேம்படுத்துவதிலும் பங்களிப்பு செய்யும் வகையில் ஓர் உயிர்த்தொழில்நுட்பவியல் புத்தாக்க பூங்காவினை தாபிக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. முன்மொழிவு செய்யப்பட்ட இந்த புத்தாக்க பூங்காவினை தாபிப்பதற்கு தேவைப்படும் நிலப்பரப்பானது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பிலான விரிவான ஆய்வுகள் மற்றும் பிரதான வியாபாரத் திட்டம் என்பன விருத்தி செய்யப்பட்டவுடன் கருத்திட்டமானது அதனது செயற்பாட்டை தொடங்கும்.

- **பசளைகள் மற்றும் மண் முகாமைத்துவத்தை விருத்தி செய்வதனூடாக தரமிழந்த மண்ணை தரம் உயர்த்துதல்**

இலங்கையில் தரமிழந்த விவசாய நிலங்களின் மண் தரத்தையும் அதன் வளத்தையும் மேம்படுத்துவதற்கு சிலின்டெக் மற்றும் தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் ஆகிய இரு நிறுவனங்களும் ஒன்றிணைந்து ஆராய்ச்சிகளை முன்னெடுக்கின்றன. மண் ஒன்றுக்கலப்பு மற்றும் நுண்ணுயிரியல் என்பனவற்றின் மூலம் மண்ணின் தரத்தை மேம்படுத்துகை செய்வதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு சிலின்டெக்கானது பச்சை வீடுகள் மண் அடைக்காப்பக ஆய்வுகளை முன்னெடுக்கின்றது. உயிர் படசுருள் - உயிர் பசளை வகைகள் மற்றும் ரைசோபயல் - உயிர் பசளை வகைகள் என்ற உயர் தரத்திற்கு உயிர் பசளையின் தரத்தை மென்மேலும் மேம்படுத்துவதற்கு தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் ஆராய்ச்சிகளை முன்னெடுக்கின்றது.

## 3.4 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

ஓர் அமைப்பாண்மையின் சகல செயற்பாடுகளினதும் வினைத்திறனை உறுதி செய்துக் கொள்வதற்கு அந்த அமைப்பாண்மையின் முறைமை மற்றும் செயன்முறை தொடர்பில் காலத்திற்கு காலம் ஓர் குறிப்பிட்ட இடைவெளியில் முன்னெடுக்கப்படும் மீள்நோக்கே உள்ளக கணக்காய்வு எனப்படும். இதன்போது அக்குறிப்பிட்ட அமைப்பாண்மையின் செயன்முறையில் இருக்கக்கூடிய தவறுகள், வினைத்திறனின்மை, மோசடியான செயற்பாடுகள் என்பன கண்டு பிடிக்கப்பட்டு திருத்தப்படும். அமைப்பாண்மையில் பின்பற்றப்படும் செயற்பாடுகளில் இருக்க வேண்டிய பயனுறுதி, வினைத்திறன், நிதியியல் அறிக்கைகளில் இருக்க வேண்டிய நம்பகத்தன்மை மற்றும் சட்டங்களுடன் இணங்குதல் என்பனவற்றை உறுதி செய்துக் கொள்வதற்கு அந்த அமைப்பாண்மையில் பின்பற்றப்படும் முறைமைக்குறிய உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் உள்ளகக் கணக்காய்வானது தனது அவதானத்தை பிரதானமாக செலுத்தும்.

உள்ளகக் கணக்காய்வு பிரிவானது, ஓர் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், இரு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு முகாமைத்துவ உதவியாளர் அத்தோடு ஓர் கணணிப் பயிலுனர் ஆகியோரைக் கொண்டிருக்கும்.

உள்ளகக் கணக்காய்வு பிரிவின் பிரதான பொறுப்பானது உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினையும் அதன் பயன் உறுதியையும் சோதித்தாராய்தல், கணக்கியல் பதிவுகளையும் அவை தொடர்பான கூற்றுக்களையும் சோதித்தாராய்தல், சொத்துக்களையும் பொறுப்புக்களையும் சோதித்தாராய்தல், புள்ளி விபரவியல் ஒப்பீடு, கணக்காய்வாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்ட கணக்காய்வு அறிக்கைக்கு வரைவு பதிலை தயாரித்தல் மற்றும் அமைச்சிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை கவனத்தில் கொள்ளல் என்பனவாகும்.

அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் பதின்மூன்று நிறுவனங்கள் இயங்குகின்றன. அவற்றுள் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு மற்றும் தேசிய ஆராய்ச்சி மன்றம் ஆகிய நிறுவனங்களுக்கு தனக்கென்றதொரு உள்ளக கணக்காய்வு பிரிவு இல்லை. ஆதலினால், இந்த மூன்று நிறுவனங்னளினதும் உள்ளக கணக்காய்வை அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவே முன்னெடுக்கின்றது. அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியில் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் இடம்பெற்றதோடு அரச கணக்காய்வு விசாரணைக் குழுவிடமிருந்து 10 விசாரணைகள் பெறப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 09 விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்பட்டது. அகக் கணக்காய்வு விசாரணைகள் 09 பெறப்பட்டதுடன் அந்த ஒன்பதிற்கும் பதில் அளிக்கப்பட்டது.

## 3.5 விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்கத்திற்கான கூட்டிணைப்பு செயலகத்தினால் விருத்தி செய்யப்பட்டுள்ள முயற்சிகள்

- வனவியல் மற்றும் சுற்றாடல் விஞ்ஞான திணைக்களத்துடன் இணைந்த வகையில் மர செயன்முறை புத்தாக்க நிலையத்தை தாபிப்பதற்கு விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்கத்திற்கான கூட்டிணைப்பு செயலகமானது ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையினை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் 2018 ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி கைச்சாத்திட்டது.

- தேசிய திண்ம விரய முகாமைத்துவ செயற்றிட்டத்தை விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்கத்திற்கான கூட்டிணைப்பு செயலகமானது பூரணப்படுத்தி ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பித்தது.

- அதிபுலமைச் சொத்து சூழல் கருத்திட்டத்தின் வர்த்தக மயப்படுத்துகை பற்றிய வட்ட மேசை கலந்துரையாடல் இடம்பெற்றது.

- அதிபுலமைச் சொத்து வர்த்தக மயப்படுத்துகை பற்றிய இரண்டாவது தேசிய பயிற்சிப் பட்டறையானது பத்தரமுல்லையிலுள்ள "வாட்டர்ஸ் எஜ்" விருந்துபசார விடுதியில் 2018 செப்டெம்பர் மாதம் 17 – 21 வரை இடம்பெற்றது.

- காப்புரிமைத் தேடல், காப்புரிமை வரைவு, நிறுவனம் சார் அதிபுலமைச் சொத்து கொள்கை வரைவு மற்றும் தொழில்நுட்பவியல் மாற்றீடு போன்ற இதரபல விடயங்கள் தொடர்பில் அதிபுலமைச் சொத்து அறிவை பரப்பும் நிமித்தம், அதிபுலமைச் சொத்து விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்கத்திற்கான கூட்டிணைப்பு செயலகம் நடாத்தியது. 2018ஆம் ஆண்டில் இடம்பெற்ற இருநாட்களைக் கொண்ட இந்த நிகழ்ச்சித் திட்டமானது ருகுணு பல்கலைக்கழகத்தில் எந்திரவியல் பீடத்திலும், மருத்துவவியல் பீடத்திலும் அத்துடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திலும் இடம்பெற்றது.

- அக காப்புரிமை செயன்முறை மற்றும் அதிபுலமைச்சொத்து பயன்பாட்டின் கீழ் 10 புத்தாக்கங்களுக்கு வழி காட்டப்பட்டன என்பதோடு, 5 காப்புரிமை தேடல்களும் முன்னெடுக்கப்பட்டதுடன் இரு காப்புரிமை வரைவுகளுக்கு உறுதுணை வழங்கப்பட்டது.

- இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் விஞ்ஞானம் பற்றிய அறிவினை சமூகத்திற்கு அறியச் செய்யுமுகமாக விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்கத்திற்கான கூட்டிணைப்பு செயலகத்தினால் ஒரு வானொளி நிகழ்ச்சித் திட்டமானது "அனந்தயா" எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஒவ்வொரு திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் மாலை 6.30 இலிருந்து 7.30 வரையில் 89.6 அல்லது 89.8 அலைவரிசைகளில் சிடி பண்பலையில் (FM) இல் ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

## 3.6 இலங்கை கோள்மண்டலம்

வானியலாராய்ச்சி எனும் துறையில் மக்களின் ஆர்வத்தை கவரந்திருத்தல், என்ற 2018ஆம் ஆண்டின் நோக்கானது இலங்கை கோள்மண்டலத்தினால் சாதிக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டில் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் 15.926 மில்லியனாகும். வானியல் ஆராய்ச்சி துறையில் புதிதாக கிடைக்கப்பெற்ற புதுப் புது விடயங்கள், சமீபத்திய அறிவு பூர்வமான விடயங்கள் என்பனவற்றை பொது மக்களிடையே பகிர்ந்து கொள்ளும் விதத்தில் கோள் மண்டல அறிமுகப்படுத்துகைகள், வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்கள், வானியல் ஆராய்ச்சி பற்றிய வகுப்புக்களும் கருத்தரங்குகளும் போன்ற பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

### 3.6.1 கோள் மண்டல அறிமுகப்படுத்துகைகள்

"சூரிய முறைமைக்கு அறிமுகப்படுத்துதல்" என்னும் தலைப்பினையுடையதும் வானியலாராய்ச்சியுடன் தொடர்புடையதுமான 3D படங்கள் உள்ளடங்கலாக பல வானியலாராய்ச்சி படங்களும் மற்றும் "இன்றைய இரவு வான்" என்னும் முன்னிலைப் படுத்துகைகள் போன்றவை கோள் மண்டலத்தினால் 2018 ஆம் ஆண்டு முழுவதும் பாடசாலை மாணவர்களுக்காகவும் பொது மக்களுக்காகவும் முன்னெடுக்கப்பட்டது.



கோள்மண்டல காட்சிப்படுத்துகைகள்

### 3.6.2 வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்கள்

வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்கள் எனும்போது அதற்குள் நடமாடும் கோள்மண்டல காட்சிகள், இரவு வான் அவதானிப்பு முகாம்கள், கண்காட்சி சாவடிகள் மற்றும் ஏனைய பல நடவடிக்கைகள் உள்ளடங்கும் என்பதுடன் வானியலாராய்ச்சி பிரபல்யப்படுத்துதல் ஒரு சமூகப் பொறுப்பு என்ற அடிப்படையில் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் இலவசமாக நடத்தப்பட்டன.



வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்கள்

### 3.6.3 வானியலாராய்ச்சி வகுப்புக்களும் கருத்தரங்குகளும்

'Astro – தகவல் தொழில்நுட்பம்' கற்கைநெறி மற்றும் Astro Kids நிகழ்ச்சித்திட்டமும் பாடசாலை மாணவர்களுக்கு வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டதுடன் அவர்கள் வானியலாராய்ச்சி மற்றும் விண்வெளி விஞ்ஞானத்தில் மிகச்சிறந்ததொரு அறிவாற்றலினை வெளிப்படுத்தியதோடு 170 மாணவர்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக பூரணப்படுத்தினர்.


இலங்கை கோள்மணடலத்தினால் வானியலாராய்ச்சி ஒலிம்பியாட் சர்வதேச பரீட்சைக்கான கருத்தரங்குகள் நடாத்தப்பட்டதுடன் 100 இற்கும் அதிகமான மாணவர்கள் இதில் பங்கு பற்றினர்.

அட்டவணை : 2018 ஆம் ஆண்டின் கோள்மண்டல நடவடிக்கைகளில் வளர்ச்சி

| நடவடிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றுனர்களின் எண்ணிக்கை | மொத்த வருமானம் ரூ. மில் |
|---|---|---|---|
| கோள்மண்டல அறிமுகப்படுத்துகைகள் | 647 | 282,390 | 15.926 |
| நடமாடும் கோள்மண்டலக் காட்சிகள் | 94 | 4,100 | இலவசமாக |
| இரவு வான் அவதானிப்பு முகாம்கள் | 11 | 1,805 | |
| கண்காட்சி சாவடிகள் | 2 | 4,500 | |
| வானியலாராய்ச்சி வகுப்புக்கள் | 2 | 170 | |
| வானியலாராய்ச்சி கருத்தரங்குகள் | 8 | 100 | |

### 3.6.4 திருத்தமைவுகள்

மாட வடிவில் அமைந்துள்ள நுழைவாயிலைத் திருத்தி, குறைந்த செலவில் புதிதாக செய்யப்பட்ட நிர்மாணமானது அதன் தனித்துவத்தை அதிகரித்ததனால் நுழைவு வாயிலுக்கு செல்லும் வழியானது கோள்மண்டலப் பார்வையாளர்களை கவரும் வண்ணமாக அமைந்துள்ளது.





புதிய நடைபாதை

## 3.7 இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவகம் (SLINTEC)

அரச தனியார் பங்குடமை என்ற அடிப்படையில் 2007ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட சிலின்டெக் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் என்ற வகையில் 2008ஆம் ஆண்டு தனது செயற்பாடுகளைத் தொடங்கியது. இதன் குறித்துறைத்து சொல்லப்படும் நோக்கானது, நனோ மற்றும் உயர் தொழில்நுட்பங்களினூடாக அக கணிய வளங்களுக்கு பெறுமானம் சேர்த்தலும் இலங்கையினது உற்பத்தி மற்றும் ஏற்றுமதி துறைக்கு ஆதரவு வழங்குதலுமாகும்.

சிலின்டெக்கினது உரிமையின் 50% ஆனது தேசிய விஞ்ஞான மன்றத்தினூடாக இலங்கை அரசிற்கு சொந்தமானது என்பதோடு மிகுதியாகவுள்ள உரிமை மூலதனமான 50% ஆனது பிரென்டிக்ஸ், டயலொக், ஹேலீஸ், லோட்ஸ்டார், மார்ஸ் மற்றும் LOLC உற்பட 7 தனியார் துறைசார் நிறுவனங்களுக்கு சொந்தமானதாகும். அகக் கட்டமைப்பு தொடர்பிலான நிதியீட்டினை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதுடன் கம்பனியின் தொழிற்பாட்டு செலவுகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் தனியார் துறையினருடன் இணைந்ததாய் ஒப்பீட்டு மூலதனத்தை வழங்குகிறது. இதைவிட நிறுவகத்திற்கு தலைமைத்துவத்தையும் சிறந்த ஆளுமையையும் தனியார் துறையினர் வழங்குகின்றனர். கம்பனியானது தனியார் கம்பனி என்ற வகையில் கூட்டிணைக்கப்பட்டதோடு கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 3.7.1 இன்று வரையில் சாதிக்கப்பட்டுள்ள பிரதான சாதனைகள்

சிலின்டெக் நிறுவகம் ஆரம்பித்த நாளிலிருந்து 2018 டிசம்பர் 31 வரையில் பிறப்பித்த வருமானம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

**தனியார்துறை பங்களிப்பு**

- உரிமை மூலதனம் ரூ. 415 மில்லியன்
- ஒப்பந்த ஆராய்ச்சி வருமானம் கிட்டத்தட்ட 282 மில்லியன் (வாடிக்கையாளரின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 41)
- கருவிகள் தொடர்பிலான பங்களிப்பு கிட்டத்தட்ட 57 மில்லியன்
- காப்புரிமை விற்பனையும் உரிமைப்பங்கு வருமானமும் கிட்டத்தட்ட அமெரிக்க டொலர் 1.4 மில்லியன் (நடப்பு நாணயப் பரிமாற்று வீதத்தில் நோக்குமிடத்து கிட்டத்தட்ட ரூ. 250 மில்லியன்). இதைவிட, எமது காரீயம் பற்றிய காப்புரிமையை எமது கிளை நிறுவனமான வரையறுக்கப்பட்ட சிலோன் காரீயம் தொழில்நுட்பங்கள் தனியார் நிறுவனத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டது. புதிய கம்பனியின் பெறுமானமானது அமெரிக்க டொலர் 2.35. (இது கிட்டத்தட்ட ரூ. 418 மில்லியன் என்பதோடு இதில் 15 வீத உரித்துரிமையை சிலின்டெக் கொண்டுள்ளது).
- சிலின்டெக்கின் இலாப நோக்கற்ற அறக்கட்டளை நிதியமானது தற்போது கிட்டத்தட்ட ரூ. 53.3 மில்லியன் பெறுமானத்தை உடையதாகும்.

**அரசதுறை பங்களிப்பு**

- உரிமை மூலதனம் ரூ. 563 மில்லியன் மற்றும் ஒப்பந்த ஆராய்ச்சி கொடுப்பனவு ரூ. 184 மில்லியன்.
- சிலின்டெக்கின் அகக் கட்டமைப்பினை நோக்குமிடத்து, கட்டிடங்கள், கருவிகள் மற்றும் ஹோமாகமயிலுள்ள பிட்டிப்பன எனுமிடத்திலுள்ள நிலம் ஆகியவை தொடர்பில் அரசு முழு நிதியீட்டினை செய்துள்ளது.

**நிதியியல் அல்லாத பங்களிப்பு / பாதிப்பு**

- முன்னர் L மொரிசன் என அறியப்பட்டதும் ஹேமாஸ் ஹோல்டிங்ஸின் ஒரு பகுதியுமான மொரிசன்ஸ் நிறுவகத்தின் அதி நவீன மருந்தகவியல் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி செயன்முறையை பூங்காவிற்குள் அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதன் மூலம் மொரிசன்ஸ் நிறுவகத்தை கவர்ந்திழுத்தல். இக்கட்டடமானது 2019ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் பூரணப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளதுடன் 2020ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் இவ்விடயம் தொடர்பிலான ஆதனம் கையளிக்கப்படும்.
- பங்குச்சந்தையில் அதிகளவு மூலதனத்தையுடைய ஜோன் கீல்ஸ் மற்றும் LOLC ஆகிய இரு நிறுவனங்களும் விஞ்ஞான ஆராய்ச்சி தொடர்பில் தமது செயற்பாட்டை நனோ தொழில்நுட்ப விஞ்ஞான பூங்காவிற்குள் இருந்து செய்கின்றன.
- ஆராய்ச்சியினை அடிப்படையாகக் கொண்ட எம்பில்/பிஎச்டி பட்டங்களை வழங்குவதற்கு சிலின்டெக் கல்வியகத்தை இலாப நோக்கற்ற அமைப்பாண்மையாக அமைத்தல். தற்போது 21 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.
- சிலின்டெக்கினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுக்கூட மட்டத்திலான பணிகளின் விளைவு என்ற வகையில் வேறுப்பட்ட கருத்திட்டங்களைக் கொண்ட தொழில்நுட்பவியல் அடைக்காப்பக நிலையத்தின் கட்டிட நிர்மாண வடிவமைப்பு பூரணப்படுத்தப்பட்டுள்ளது. இதைவிட தொழில்நுட்ப அடைக்காப்பக நிலையத்தை தாபிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பானது, ஜோன் கீல்ஸ் மற்றும் LOLC இனது ஆராய்ச்சி பணிகளின் நிமித்தம் தற்போது பயன்படுத்தப்படுகிறது. CIC நிறுவனமானது தமது பணிகளின் நிமித்தம் ஒரு வருட காலத்துக்கு நிலப்பரப்பொன்றை ஒதுக்கீடு செய்வதற்கு தீர்மானித்த போதிலும் அது தனது எதிர்கால ஆராய்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தற்காலிகமாக ஒரு முற்றுப்புள்ளியை வைத்துள்ளது. இதைவிட, இந்த வசதிகளுக்குள், ஏவப்பட்ட மருந்தகவியல் உள்ளீடுகளின் உற்பத்தி செயற்திறனும் செயற்கை முறையிலான உயிரியல் நிகழ்ச்சித் திட்டமும் தாபிக்கப்பட்டுள்ளது.

- ஏவப்பட்ட மருந்தகவியல் உள்ளீடுகளின் உற்பத்தி செயற்திறனானது இலங்கையில் நனோ தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான பூங்காவில் தொழில்நுட்பவியல் அடைக்காப்பக நிலையத்திலேயே முதன்முதலாக தாபிக்கப்பட்டது.

**காப்புரிமை, பிரசுரிப்புக்கள் மற்றும் வருமானம்**

- சிலின்டெக் நிறுவகமானது 15 காப்புரிமைகளுக்கு விண்ணப்பித்துள்ளது. இதில் 13 அமெரிக்காவிற்கும் 02 இலங்கைக்கும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. 2018/2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இன்னும் 06 காப்புரிமைகள் அமெரிக்காவிற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 02 இலங்கைக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளன.

- காப்புரிமை மாற்றீடு செய்யப்பட்டதில் கிட்டத்தட்ட அமெரிக்க டொலர் 1.35 மில்லியன் நிதியம் உழைக்கப்பட்டதோடு எமது முதலாவது கிளை நிறுவனமான வரையறுக்கப்பட்ட சிலோன் கிரபின் தனியார் நிறுவகத்திடமிருந்து உரிமை மூலதனம் என்ற வகையில் அமெரிக்க டொலர் 350K கிடைக்கப் பெற்றது.

- வெற்றியடைந்த ஆராய்ச்சி கருத்திட்டங்களிலிருந்து உரிமைப்பங்கு என்ற வகையில் கிட்டத்தட்ட ரூ. 7.8 மில்லியன் உழைக்கப்பட்டது. இது எமக்கு கிடைக்கப்பெற்ற முதலாவது உரிமைப்பங்கு வருமானமாகும். (இதன் மூலம் வாடிக்கையாளர் கிட்டத்தட்ட ரூ. 40 மில்லியன் வருமானத்தைப் பெற்று நன்மையடைந்தார்.)

- தனியார் துறை பங்காளருடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்த ஆராய்ச்சிகள் மூலமும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராயச்சி அமைச்சுடன் ஏற்படுத்திக் கொண்ட திறமுறை ஆராய்ச்சி கருத்திட்டங்கள் மூலமும் கிட்டத்தட்ட ரூ. 466 மில்லியன் உழைக்கப்பட்டது.

- முதலாவது வர்த்தக ரீதியிலான உற்பத்தியானது 2019 பெப்ரவரி மாதம் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- இதுவரையில் கிட்டத்தட்ட 84 ஆக்கங்கள் புகழ்மிக்க சர்வதேச சஞ்சிகைகளில் பிரிசுரிக்கப்பட்டுள்ளது.

**2018 டிசம்பர் 31இல் உள்ளவாராக பங்குடமைகள், அறக்கட்டளைகள் மற்றும் பதவியணிவலு**

- **பங்குடமைகள்**
  - இலங்கை இலுமினைட்டை தைத்தேனியம் டியொக்சைடாக மாற்றுவதற்கான ஓர் செயன்முறையை விருத்தி செய்வதற்கான ஒரு முன்னோடி திட்டத்தை நிர்மாணிப்பதற்கு லாப் கேஸ் நிறுவனத்துடன் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ளுதல். (இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கும் வகையில் கிட்டத்தட்ட ரூ. 57 மில்லியனை வாடிக்கையாளர் செலவு செய்தார்). இந்த முயற்சி வெற்றிகரமாக அமைந்தது.
  - இலங்கையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட VEIN காரீயத்திலிருந்து பெறக்கூடிய உயர் தரமான காரீயத்தை வர்த்தக மயப்படுத்துதல் தொடர்பில் LOLC நிறுவகத்துடன் ஏற்படுத்திக் கொண்ட இணை கூட்டுமுயற்சி. (இதில் 15% உரிமையாண்மையானது சிலோன் கிரபின் டெக்னொலொஜிஸ் நிறுவகத்திற்கு உரித்தானதாகும்.)
  - பல அக பல்கலைக்கழகங்களுடனும் சிங்கப்பூரிலுள்ள நனியங்கு தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்துடனும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதோடு சீனாவிலுள்ள கியூமிங் எனுமிடத்திலுள்ள யுனான் கிராமிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பிவியல் சேவை நிலையத்துடனும் ஐரோப்பாவில் மிகப்பெரிய நிறுவனமாக திகழும் பிரயோக ஆராய்ச்சி கம்பனியான ஜேர்மனியிலுள்ள புரோன் ஒப்பர் நிறுவகத்துடனும் கூட்டுறவு உடன்படிக்கை முன்னெடுக்கப்பட்டது.

- **அறக்கட்டளை**

  அறக்கட்டளை நிதியமொன்று உருவாக்கப்பட்டதோடு அதன் பெறுமானம் ரூ. 53.27 மில்லியனாகும். பிளாட்டினம் அனுசரணையாளர் ரூ. 25 மில்லியன், தங்க அனுசரணையாளர் ரூ. 15 மில்லியன், வெள்ளி அனுசரணையாளர் ரூ. 5.0 மில்லியன் மற்றும் ஒருவர் ரூ. 1 மில்லியன் என்ற அடிப்படையில் 8 பங்களிப்பாளர்கள் இதைவிட ஒரு மில்லியனுக்கும் குறைவான பங்களிப்பை செய்த சிறு பங்களிப்பாளர்கள்.

- **2018 டிசம்பர் 31 இல் உள்ளவாரான பதவியணி வலு**

  சிலின்டெக் கம்பனியானது 87 அலவலர்களை தன்னகத்தே கொண்டுள்ளதோடு அவர்களில் 62 பேர் விஞ்ஞானம் மற்றும் எந்திரவியலுடன் தொடர்புடையவர்கள் என்பதுடன் அதில் 24 பேர் பிஎச்டி பட்டத்தை உடையர்கள்.

### 3.7.2 நனோ தொழில்நுட்பவியலும் விஞ்ஞான பூங்காவின் விருத்தி

நிறுவகமானது 56 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட நனோ தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான பூங்காவிற்கு 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி நகர்ந்தது. இந்த நிலப்பரப்பில் ஏற்கனவே கிட்டத்தட்ட 48% பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு கிட்டத்தட்ட 18% பயன்படுத்துவதற்கு கோரப்பட்டுள்ளதோடு அது தொடர்பிலான கலந்துரையாடல்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலப்பரப்பில் 7 ஏக்கர் நிலப்பரப்பு உயிர் தொழில்நுட்பவியல் முயற்சி நிமித்தம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பிலான சில கருத்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

- நிறுவை மற்றும் அளவீடுகள் வசதிகள் நிமித்தம் 6 ஏக்கர்கள் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. – தாபிப்பு மற்றும் பயன்படுத்துகை
- பாதுகாப்பு அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் நிமித்தம் 2 ஏக்கர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- பூங்காவிலுள்ள வாடகையாளர்கள் நிமித்தம் வழங்கப்படக்கூடிய சிற்றுண்டிச்சாலை, தங்குமிட வசதி, கட்டிட விஸ்தரிப்பு வசதி மற்றும் ஏனைய பொது வசதிகள் நிமித்தம் 7.5 ஏக்கர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் 6.1 ஏக்கர் நிலப்பரப்பு எதிர்கால விரிவாக்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- தொழில்நுட்பவியல் அடைக்காப்பக வசதி மற்றும் அதி நவீனமான முறையில் அமைக்கப்பட்டுள்ள பச்சை வீடுகள் ஆகியவை நிமித்தம் 3.4 ஏக்கர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
- வரையறுக்கப்பட்ட மொரிசன்ஸ் தனியார் நிறுவகத்தினது அதி நவீன வசதிகளைக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி வசதியினை தாபிப்பதற்கு 5 ஏக்கர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு மேலும் 2 ஏக்கர்கள் ஒதுக்கீடு செய்யும்படி வாய்மொழி மூலமாக கோரிக்கை செய்யப்பட்டுள்ளது.
- விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் வேண்டுகோளின் பேரில் உயிர் தொழில்நுட்பவியல் முயற்சிக்கு 7 ஏக்கர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.
- LOLC உடனான கிரபின் திட்டத்தின் நிமித்தம் பாவிக்கப்படுவதற்கு ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. – முடிவுக்கு கொண்டுவரப்படல் வேண்டும்
- LOLC உடன் 2 ஏக்கர் நிலப்பரப்பிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. – முடிவுக்கு கொண்டுவரப்படல் வேண்டும்
- பாதையின் நிமித்தமும் பொது பாவனைக்காகவும் 3.2 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.7.3 மூளைசாலிகளின் உள்வருகை

இலங்கையை பிறப்பிடமாகக் கொண்டு அமெரிக்கா, ஐரோப்பியா, ஜப்பான், கொரியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வதியும் பிஎச்டி தகைமைகளைக் கொண்ட 22 விஞ்ஞானிகளை மீண்டும் இலங்கையில் குடியேறும்படி கோருதல்.

### 3.7.4 ஏனைய நடவடிக்கைகள்

- சிலின்டெக்கினால் முன்னெடுக்கப்பட்ட பலதரப்பட்ட விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக ஆராய்ச்சி தரைத்தோற்ற அமைப்பினை மாற்றுவதற்கு குறிப்பிட்டு சொல்லத்தக்க அளவில் பங்களிப்பு செய்தல்.

- சிறிய இடைநிலை வியாபார முயற்சி துறையாளருடன் இணைந்து பணியாற்றுவதனூடாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை, தேசிய ஏற்றுமதி வர்த்தக சபை மற்றும் மருந்தகவியல் உற்பத்தியாளர் அமைப்பு ஆகியோருக்கு ஆதரவு வழங்கல்.

- கூட்டிணைவு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்குமுகமாக அக மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பணியாற்றுதல். இந்த திறந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களில் சிலின்டெக் நிறுவனமானது தேசிய ஆய்வுகூடம் என்ற அடிப்படையில் தனது பங்களிப்பை வழங்குகிறது.

- கருவிகளை அடிப்படையாகக் கொண்ட சிறந்த விளைவளவுகளைத் தரக்கூடிய ஆராய்ச்சிகளை முன்னெடுப்பதற்கு பல்கலைக்கழகங்களுக்கு பாதை வகுத்துக் கொடுத்தல்.

- இலங்கையில் புத்தாக்க மற்றும் வினைமுயலுமை நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குதல்.

- 2015 மார்ச் மாதம் U.S Green Building மன்றத்தினால் புதிதாக செய்யப்பட்ட நிர்மாணத்தின் நிமித்தம் "சக்தி மற்றும் சூழல் வடிவமைப்பில் தலைமைத்துவம்" (LEED) எனும் தொனிப்பொருளின் கீழ் பிளாட்டினம் சான்றிதழ் சிலின்டெக் நிறுவகத்திற்கு வழங்கப்பட்டது. LEED சான்றிதழானது நிலையான வடிவமைப்பிற்கான முன்மாதிரி உதாரணம் என்ற வகையில் நனோ தொழில்நுட்பத்தின் அதி நேர்த்திமிகு நிலையத்தை இனங்காண்கிறது.

## 3.8 2018 ஆம் ஆண்டின் பாதீட்டு பிரேரணைகளின் செயற்படுத்துகை

| பிரேரணை இலக்கம் | பிரேரணை | செயற்படுத்தும் முகவராண்மை | மொத்த ஒதுக்கீடு (ரூ.மில்) | செலவினம் (ரூ.மில்) | முன்னேற்றம் (சொற்களில்) |
|---|---|---|---|---|---|
| 47 | நீலம் பச்சை பொருளதாரத்திற்கு வேர்ச்சுவல் நிறுவகமொன்றை தாபித்தல் | அமைச்சு | 25 | 0 | அமைச்சரவை விஞ்ஞாபனமானது அனுமதிக்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது |
| 54 | தரமிழந்த மண் வளத்தை தரமேற்றுதல் | சிலின்டெக் / கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் / தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் | 50 | 38.6 | சிலின்டெக் - மண் ஒன்று சேர்க்கை மற்றும் நுண்ணுயிரிய தரமுயர்ப்பு என்பவற்றினூடாக மண்ணின் தரத்தை மதிப்பீடு செய்வதற்கு பச்சை வீடுகள் / மண் அடைக்காப்பக ஆய்வுகளை முன்னெடுத்தல். மேலும் நுண்ணுயிரியலை கூட்டிணைத்த பின்னர் ஏற்பட்ட மாற்றங்களை மதிப்பீடு செய்வதற்கு சோதனைகள் தொடங்கப் பட்டுள்ளன. தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் - மஹாவ பிரதேசத்தில் கள பரீட்சார்த்த சோதனை சிறப்பாக நடைபெற்றது. எவ்வாறாயினும் இப்பிரதேசத்தின் வறட்சியால் பெரிதளவில் பாதிக்கப்பட்ட காரணத்தினால் கள பரீட்சார்த்த சோதனையை கைவிட வேண்டியதாயிற்று. கம்பொல மற்றும் தலகொல்ல பிரதேசங்களில் மரக்கறிகள் தொடர்பில் செய்யப்பட்ட இரு செய்கைமுறையளிப்பு கள பரீட்சார்த்த சோதனைகளின் பெறுபேறுகள் சாதகமானதாக இருந்ததோடு மத்திய மாகாணத்தைச் சார்ந்த மாகாண விவசாய திணைக்களமானது உயிர் உரத்தினை கோரி கட்டளையை முன்வைத்துள்ளது. மஹாயிலுபள்ளம எனுமிடத்தில் பச்சை வீடு நிபந்தனைகளின் கீழ் செய்யப்பட்ட சோதனைகள் ஊக்குவிப்பதாக அமைந்தன என்பதோடு வெளிவாரி கள பரீட்சார்த்த சோதனைகள் உயிர் பசளையின் காரணமாக வறட்சியைத் தடுப்பதற்கான சாத்தியக் கூறுகளைப் பற்றி ஆராய்வதற்காக தொடங்கப்பட்டது. அரச விவசாயத் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டமான சோயாபீன் விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு உயிர் உரத்தை பிரயோகித்தலானது தொடரப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | பச்சை வீட்டின் நிர்மாணமானது முடியும் தருவாயில் உள்ளது. மூக்குத்தி தாவரத்தை உயிர் அளவீட்டு முறை தாவரமாக பயன்படுத்துதல். இரசாயனம் மற்றும் கண்ணாடிகளுக்கான கட்டளைகள் பூரணப்படுத்தப்பட்டதோடு அவை கையளிக்கப்பட்டன.<br>உயிர் படசுருள் உயிர் பசளை – 64 பரீட்சார்த்த சோதனைகளில் 44 சோதனைகளாவன அம்பலாந்தோட்ட, அம்பாறை, நிக்கரெட்டிய மற்றும் மஹியங்கனை ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன. உயிர் படசுருள் பிரயோகத்தின் கீழ் தாவர வளர்ப்பானது வெற்றிகரமாக அமைந்துள்ளது. மண் மற்றும் தாவர மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தனிப்படுத்தப்பட்டிருந்த நுண்ணுயிரிகள் ஆய்வுகூடத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டது. உயிர் பசளை தொடர்பில் விவசாயத் திணைக்களத்துடனான இணைப் பிரேரணையானது அமைச்சினூடாக திறைசேரிக்கு சமரப்பிக்கப்பட்டதுடன் பதில் எதிர்நோக்கப்பட்டுள்ளது. |
| **93** | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம், இலங்கை கட்டளைகள் நிறுவகம், தேசிய தொற்றுநோய் நிலையம் மற்றும் நீரியல் ஆராய்ச்சிக்கான தேசிய முகவராண்மை ஆகியவற்றில் சோதனை வசதிகளை மேம்படுத்தல். | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் | 50 | 0 | ஆய்வுகூட புணருத்தாபனம் மற்றும் தற்போதுள்ள பதவியணியினரை பயிற்றுவித்தல் என்பன. புதிய ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அனுமதி எதிர்நோக்கப்பட்டுள்ளது. புதிய கருவிகள் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட ஆவணங்களாவன (தொழில்நுட்பவியல் மதிப்பீட்டுக் குழு / DPC குறிப்புக்கள்) அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அக்கறைத் தொகை பெறப்படுவதற்கு எதிரப்பாரக்கப்பட்டுள்ளது. தொழில் முறையின் நிமித்தம் பெறுகை செயன்முறைகள் நடைபெறுகின்றன. |
| | | இலங்கை கட்டளைகள் நிறுவகம் | 150 | 0 | மதிப்பீடுகள் பூரணப்படுத்தப்பட்டு ERP முறைமைக்கான கேள்வி அறிவித்தல் ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **101** | விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்க கூட்டிணைப்பு செயலகத்தை நஸ்டிகாவாக (NASTICA) மாற்றுதல் | அமைச்சு | 25 | 0 | சிற்சில அவதானிப்புக்கள் மற்றும் தெளிவுப் படுத்தல்களை உள்ளடக்கியதன் பின்னர் சட்டத்தின் இறுதி வரைவானது சட்ட வரைஞர்கள் திணைக்களத்தினால் அமைச்சின் கோரிக்கைக்கு அமைவுற அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசியலமைப்புக்குரிய சான்றிதழை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இச்சட்டமானது கணக்காய்வாளர் நாயக திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| **103** | இயந்திர இலத்திரனியனால் சாத்தியப் படக்கூடிய உற்பத்தி வடிவமைப்பு எந்திரவியலுக்கு ஆதரவு வழங்குதல் (MEDI) | அமைச்சு | 250 | 0 | SPTF பிரேரணைக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. அக்கறைத் தொகை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி திணைக்களத்திற்கு மாற்றப்படுவதற்கு எதிர் நோக்கப்பட்டுள்ளது. |
| **124** | மரம் மற்றும் மரம்சார் உற்பத்திகளுக்கு வடிவமைப்பு நிலையம் ஒன்றை தாபித்தல். | அமைச்சு | 25 | 15 | நிதியமானது ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினூடா மரவடிவமைப்பு பத்தாக்க நிலையத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டதுடன் மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு நிதியம் மாற்றீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுளது. |
| **149** | தொழில்நுட்ப புத்தாக்க பூங்காவை தாபித்தல். இலங்கை உயிர் தொழில்நுட்ப புத்தாக்க பூங்காவை பிட்டிபனையில் உள்ள மஹேன் வத்தையில் தாபித்தல் | அமைச்சு | 100 | 100 | உயிர் தொழில்நுட்ப புத்தாக்க பூங்கா மற்றும் இலங்கை உயிர் தொழில்நுட்ப புத்தாக்க பூங்கா<br>• நிலத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூ. 380 மில்லியன் கொடுப்பனவு<br>• வியாபார திட்டத்தின் முதலாவது வரைவானது விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்க கூட்டிணைப்பு செயலகத்தினால் தயாரிக்கப்பட்டது.<br>• முகாமைத்துவ மாதிரியின் முதலாவது வரைவானது விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்க கூட்டிணைப்பு செயலகத்தினால் தயாரிக்கப்பட்டது.<br>• நிலத்திற்காக செய்யப்பட வேண்டிய கொடுப்பனவு தொடர்பில் எஞ்சியுள்ள முழுக் கொடுப்பனவையும் செய்வதற்கு அக்கறைத் தொகை எதிர்நோக்கப்பட்டுள்ளது. |

# 4. 2018ஆம் ஆண்டின் நிதியியல் சாதனைகள்

## 4.1 அமைச்சினதும் அதன் நிறுவனங்களினதும் நிதியியல் சாதனைகளின் சுருக்கம்

| விபரணம் | ஒதுக்கீடு | | செலவினம் | |
|---|---|---|---|---|
| | நடப்பு (ரூ.மில்) | மூலதனம் (ரூ.மில்) | நடப்பு (ரூ.மில்) | மூலதனம் (ரூ.மில்) |
| அமைச்சரின் அலுவலகம் | 31.522 | 3.634 | 28.387 | 2.978 |
| நிர்வாகம் மற்றும் தாபிப்பு சேவைகள் | 163.303 | 7.021 | 111.969 | 4.383 |
| இராஜாங்க அமைச்சரின் அலுவலகம் | 32.250 | 7.345 | 30.494 | 4.113 |
| விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 472.71 | 3422.543 | 452.148 | 2163.355 |
| கோள் மண்டலம் | 23.678 | 108.600 | 23.134 | 20.277 |
| நிறுவனங்கள் | 1165.137 | 1259.385 | 1065.568 | 1037.696 |
| **மொத்தம்** | **1888.600** | **4808.528** | **1711.700** | **3232.802** |

## 4.2 அமைச்சின் நடப்பு செலவினம்

**அமைச்சு : விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு**
**செலவினத் தலைப்பு : 196**
**வகுதி : தனியாள் வேதனாதிகள் மற்றும் ஏனைய நடப்பு செலவினங்கள்**

| விபரணம் | ஒதுக்கீடு (ரூ.மில்) | செலவினம் (ரூ.மில்) | மிகுதி (ரூ.மில்) |
|---|---|---|---|
| **அமைச்சரின் அலுவலகம்** | | | |
| தனியாள் வேதனாதிகள் | 13.700 | 11.584 | 2.116 |
| ஏனைய நடப்பு செலவினம் | 17.822 | 16.803 | 1.019 |
| **உப கூட்டுத்தொகை** | **31.522** | **28.387** | **3.135** |
| **நிர்வாகம் மற்றும் தாபிப்பு சேவைகள்** | | | |
| தனியாள் வேதனாதிகள் | 61.100 | 58.149 | 2.950 |
| ஏனைய நடப்பு செலவினம் | 102.203 | 53.820 | 48.383 |
| **உப கூட்டுத்தொகை** | **163.303** | **111.969** | **54.333** |
| **இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்** | | | |
| தனியாள் வேதனாதிகள் | 10.700 | 9.529 | 1.171 |
| ஏனைய நடப்பு செலவினம் | 21.550 | 20.965 | 0.585 |
| **உப கூட்டுத்தொகை** | **32.250** | **30.494** | **1.756** |
| **விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | | | |
| **உப கூட்டுத்தொகை** | **472.71** | **452.148** | **20.562** |
| **கோள் மண்டலம்** | | | |
| தனியாள் வேதனாதிகள் | 10.450 | 10.343 | 0.107 |
| ஏனைய நடப்பு செலவினம் | 13.228 | 12.791 | 0.437 |
| **உப கூட்டுத்தொகை** | **23.678** | **23.134** | **0.544** |
| **கூட்டுத்தொகை** | **723.463** | **646.132** | **77.331** |

## 4.3 நிறுவனங்களின் நடப்பு செலவினம்

**அமைச்சு : விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு**
**செலவினத் தலைப்பு : 196**
**வகுதி : தனியார் வேதனாதிகள் மற்றும் ஏனைய நடப்பு செலவினங்கள்**

| விபரணம் | ஒதுக்கீடு (ரூ.மில்) | செலவினம் (ரூ.மில்) | மிகுதி (ரூ.மில்) |
|---|---|---|---|
| **அரச நிறுவனங்கள்** | | | |
| நவீன தொழில்நுட்ப நிலையத்திற்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம் | 136.637 | 127.700 | 8.937 |
| தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் | 190.000 | 185.023 | 4.977 |
| கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் | 280.000 | 240.000 | 40.000 |
| தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் | 290.000 | 255.520 | 34.480 |
| தேசிய ஆராய்ச்சி மன்றம் | 23.000 | 22.807 | 0.193 |
| தேசிய விஞ்ஞான மன்றம் | 140.000 | 139.501 | 0.499 |
| தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு | 33.000 | 23.134 | 3.865 |
| இலங்கை தராதர அங்கீகார சபை | 19.500 | 17.064 | 2.436 |
| இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு | 53.000 | 48.819 | 4.181 |
| **மொத்தம்** | **1165.137** | **1065.568** | **99.569** |

## 4.4 அமைச்சின் மூலதன செலவினம்

**4.4.1 அமைச்சு : விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு**
**செலவினத் தலைப்பு : 196**
**வகுதி : புணருத்தாரணம் மற்றும் கொள்வனவு**

| விபரணம் | ஒதுக்கீடு (ரூ.மில்) | செலவினம் (ரூ.மில்) | மிகுதி (ரூ.மில்) |
|---|---|---|---|
| **அமைச்சரின் அலுவலகம்** | | | |
| புனருத்தாரணம் | 1.400 | 0.751 | 0.648 |
| கொள்வனவு | 2.234 | 2.227 | 0.007 |
| **உப கூட்டுத்தொகை** | **3.634** | **2.978** | **0.656** |
| **நிர்வாக தாபிப்பு சேவைகள்** | | | |
| புனருத்தாரணம் | 5.425 | 2.894 | 2.531 |
| கொள்வனவு | 0.248 | 0.226 | 0.022 |
| செயற்றிறன் நிர்மாணம் | 1.348 | 1.262 | 1.238 |
| **உப கூட்டுத்தொகை** | **7.021** | **4.383** | **2.639** |
| **இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்** | | | |
| புனருத்தாரணம் | 6.700 | 3.471 | 3.229 |
| கொள்வனவு | 0.645 | 0.642 | 0.003 |
| **உப கூட்டுத்தொகை** | **7.345** | **4.113** | **3.232** |
| **மொத்தம்** | **18.000** | **11.474** | **6.527** |

**4.4.2 அமைச்சு : விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு**
**செலவினத் தலைப்பு : 196**
**வகுதி : புணருத்தாரணம், கொள்வனவு மற்றும் மூலதன செலவினங்கள்**

| விபரணம் | ஒதுக்கீடு (ரூ.மில்) | செலவினம் (ரூ.மில்) | மிகுதி (ரூ.மில்) |
|---|---|---|---|
| **விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்** | | | |
| 1. விதாதா நிகழ்ச்சித் திட்டம் | | | |
| **உப கூட்டுத்தொகை** | **166.543** | **135.951** | **30.592** |
| 2. ஆராய்ச்சி மற்றும் அபிவருத்தி நிகழ்ச்சித் திட்டம் | | | |
| விஞ்ஞான தொழில்நுட்ப பிரபல்யப்படுத்துகை நிகழ்ச்சித் திட்டம் | 20.000 | 12.822 | 7.178 |
| விஞ்ஞான பயிற்சி | 20.000 | 8.335 | 11.665 |
| விஞ்ஞான தொழில்நுட்பத்தில் ஏனைய நாடுகளுடன் கூட்டிணைதல் | 30.000 | 29.977 | 0.023 |
| ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்கு துணையாக இருத்தல் | 5.000 | 0.480 | 4.520 |
| விஞ்ஞான தொழில்நுட்ப எந்திரவியல் எண்கணித கற்கைகள் | 25.000 | 12.224 | 12.776 |
| ஐரோப்பிய அமைப்பாண்மையின் நடவடிக்கைகளை அமுல்படுத்தல் | 46.000 | 31.956 | 14.044 |
| **உப கூட்டுத்தொகை** | **146.000** | **95.794** | **50.206** |
| 3. நனோ தொழில்நுட்பம் | | | |
| இயந்திரம் மற்றும் கருவிகள் | 190.000 | 187.020 | 2.980 |
| கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 1000.000 | 966.177 | 33.826 |
| ஒப்புரவு பங்களிப்பு | 125.000 | 55.000 | 70.000 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 78.000 | 74.031 | 3.969 |
| ஏனையவை | 50.000 | 49.560 | 0.440 |
| **உப கூட்டுத்தொகை** | **1443.000** | **1331.785** | **111.215** |
| 4. ஆராய்ச்சி அபிவிருத்தி முதலீட்டு சட்டகத்தை அமுல்படுத்துகை செய்தல் | | | |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 15.000 | 14.592 | 0.408 |
| **உப கூட்டுத்தொகை** | **15.000** | **14.592** | **0.408** |
| 5. விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத்திற்கான கூட்டிணைப்பு செயலகம் (COSTI) | | | |
| முதலீடுகள் | 30.000 | 2.956 | 27.043 |
| **உப கூட்டுத்தொகை** | **30.000** | **2.956** | **27.043** |
| 6. தேசிய விஞ்ஞான நிலையத்தை தாபித்தல் | | | |
| ஆராய்ச்சி அபிவிருத்தி | 240.000 | 81.098 | 158.902 |
| **உப கூட்டுத்தொகை** | **240.000** | **81.098** | **158.902** |
| 7. சூரிய பலகங்களின் மூலவகை மாதிரிகளின் உற்பத்தி | | | |
| இயந்திரம் மற்றும் கருவிகள் | 36.250 | 2.363 | 33.287 |
| ஆராய்ச்சி அபிவிருத்தி | 3.750 | 3.683 | 0.066 |
| **உப கூட்டுத்தொகை** | **40.000** | **6.646** | **33.354** |
| 8. கோள் மண்டலம் | | | |
| புனருத்தாரணம் | 35.500 | 14.016 | 21.484 |
| கொள்வனவு | 61.500 | 5.042 | 56.458 |
| ஏனைய மூலதன செலவினம் | 10.000 | 0 | 10.000 |
| செயற்திறன் நிர்மாணம் | 1.000 | 0.890 | 0.110 |
| விஞ்ஞானம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச கூட்டுறவு | 0.600 | 0.329 | 0.271 |
| **உப கூட்டுத்தொகை** | **108.600** | **20.277** | **88.323** |
| **மொத்தம்** | **2189.143** | **1689.099** | **500.043** |

**4.4.3 அமைச்சு : விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு**
**செலவினத் தலைப்பு : 196**
**வகுதி : பாதீட்டு பிரேரணை**

| விபரணம் | *ஒதுக்கீடு (ரூ.மில்) | செலவினம் (ரூ.மில்) | மிகுதி (ரூ.மில்) |
|---|---|---|---|
| **பாதீட்டு பிரேரணை** | | | |
| 1. உயிர்த் தொழில்நுட்ப புத்தாக்க பூங்காவினை அரச தனியார் பங்குடமை அடிப்படையில் தாபித்தல் | 400.000 | 395.320 | 4.679 |
| 2. மரபுரிமையியல் விஞ்ஞானத்தில் அதி நேர்த்தியான நிலையமொன்றை தாபித்தல் | 50.000 | 0 | 50.000 |
| 3. கூட்டிணைவுடன் அடைக்காப்பகங்களை தாபித்தல் | 75.000 | 5.000 | 70.000 |
| 4. இலங்கை கட்டளைகள் நிறுவகத்திற்கு ஆய்வுகூட வசதிகள் | 44.000 | 0 | 44.000 |
| 5. சமூக புத்தாக்க ஆய்வுகூடத்தை தாபித்தல் | 40.000 | 25.000 | 15.000 |
| 6. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தில் பெற்றோலியம் உற்பத்திகளை சோதிக்க வசதிகளை தாபித்தல் | 100.000 | 5.000 | 95.000 |
| 7. இயந்திர இலத்திரனியலால் சாத்தியப்படக்கூடிய பொருளாதார அபிவிருத்தி புது முயற்சி | 325.000 | 0 | 325.000 |
| 8. விணிவெளி தொழில்நுட்ப செயற்றிறன் அபிவிருத்தி | 33.000 | 5.000 | 28.000 |
| 9. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்திலும் இலங்கை கட்டளைகள் நிறுவகத்திலும் சோதனை வசதிகளை மேம்படுத்தல் | 200.00 | 5.109 | 194.891 |
| 10. மரம் சார் உற்பத்திகளுக்கு வடிவமைப்பு நிலையமொன்றை தாபித்தல் | 25.000 | 15.500 | 9.500 |
| 11. பசளை வகைகள் மற்றும் மண் முகாமைத்துவ யுக்திகளினை விருத்தி செய்வதனூடாக மண்வளத்தை மேம்படுத்தல் | 50.000 | 38.602 | 11.397 |
| **மொத்தம்** | **1342.000** | **494.531** | **847.467** |

* வழமையான பாதீட்டு அளவினையும் ஒதுக்கீடு உள்ளடக்குகிறது

## 4.5 நிறுவனங்களின் மூலதன செலவினம்

**4.5.1 அமைச்சு : விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு**
**செலவினத் தலைப்பு : 196**
**வகுதி : புணருத்தாரணம் மற்றும் கொள்வனவு அத்துடன் ஏனைய மூலதனச் செலவினம்**

| விபரணம் | ஒதுக்கீடு (ரூ.மில்) | மொத்த செலவினம் (ரூ.மில்) | மிகுதி (ரூ.மில்) |
|---|---|---|---|
| நவீன தொழில்நுட்ப நிலையத்திற்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம் (ACCIMT) | 100.000 | 37.002 | 62.998 |
| தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் (NIFS) | 120.000 | 98.194 | 21.806 |
| கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் (ITI) | 350.000 | 303.740 | 46.260 |
| தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (NERDC) | 57.000 | 57.000 | 0 |
| தேசிய ஆராய்ச்சி மன்றம் (NRC) | 200.00 | 162.050 | 37.950 |
| தேசிய விஞ்ஞான மன்றம் (NSF) | 300.385 | 283.692 | 16.693 |
| தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு (NASTEC) | 12.000 | 10.269 | 1.731 |
| இலங்கை தராதர அங்கீகார சபை (SLAB) | 0 | 0 | 0 |
| இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு (SLIC) | 120.000 | 85.750 | 34.250 |
| **உப கூட்டுத்தொகை** | **1259.385** | **1037.696** | **221.689** |

## 4.6 முற்பண கணக்குகள்

| அரச நடவடிக்கைகளின் அதி கூடியதாக செலவினத் தொகை (ரூ.மில்) | அரச நடவடிக்கைகளின் அதி கூடியதாக பெறுகைத் தொகை (ரூ.மில்) | அரச நடவடிக்கைகளின் அதி கூடியதாக மட்டுப்படுத்தப்பட்ட பற்று மீதி (ரூ.மில்) |
|---|---|---|
| 33,000,000 | 17,500,000 | 95,000,000 |

3 වන මහල, සෙත්සිරිපාය, 1 වන අදියර, බත්තරමුල්ල
3rd Floor, Sethsiripaya, 1st Stage, Battaramulla
3 ஆவது தளம், செத்சிறிபாய கட்டம் - 1, பத்தரமுல்லை